1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele grams: "CATHOLIC PRESS"; JAFFNA.
Tele phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு மார்கழி மாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 48-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

இவ்வாரத்தில் இடையிடையே சிறுகப்பெய்துவந்தமழை சென்றஇரவு பெருமழையாகப் பெய்யலாயிற்று. இன்னும் அதிகமான மழைக்கோலம் காணப்படுகின்றது.

### நம்மேற்றிராணியாண்டவர்

இம்மாதம் 1-ந்திகதி புதன்கிழமையன்று மார்சேல்ஸ் துறைமுகத்திலிருந்து நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள்புறப்பட்ட "லா மார்செய்யேர்ஸ்" எனும்கப்பலானது 12-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டவர்அவர்களுடன்,கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த வண.பூர்ஷியோ, வண. தோமஸ்எனும் இரு குருப்பிரசாதிகளும் வருகின்றார்கள்.

### நகரசபைத் தேர்தல் முடிவுகள்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண நகரசபைத்தேர்தல் முடிவுற்றது. அன்று பகல்முழுவதும் காலநிலை நன்றாக இருந்தது. அதனால் தேர்தல் மும்முரமாக நடைபெற்றது. ஆனால், வாக்குச்சீட்டுகள் எண்ண ஆரம்பித்ததும் மழைசோனவாரியாகப் பெய்யத் தொடங்கியது. இரவு முழுவதும் மழைபெய்து கொண்டேயிருந்தது.

நகரசபை அங்கத்தவர்கள் ஐவர் அன்றைய தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். நால்வர் தோல்வியுற்றனர். தேர்தல் முடிவுவிபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளை, 402. (தற்போதைய அங்கத்தவர்)

திரு. எஸ். எவ் எக்ஸ். அண்ணசாமிப்பிள்ளை, 112.

திரு. ஐ. எக்ஸ். இராசநாயகம், 270. — அதிகப்படி 132.

2-ம் வட்டாரம்: திரு. எம். பிரான்சீஸ் சேவியர், 1254. திரு. ஆபிரகாம் யோசேப், 851. — அதிகப்படி 403.

3-ம் வட்டாரம்: திரு. ஈ. கே. நெவின்ஸ் செல்வத்துரை, 1236. திரு. எம். ஜேக்கப், 834. — அதிகப்படி 402.

4-ம் வட்டாரம்: திரு. அல்பிறெட் ரீ. துரையப்பா, 959 (உதவி மேயர்). திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை, 686. — அதிகப்படி 273.

5-ம் வட்டாரம்: திரு. பி. நடராஜா, 846. திரு. பி. காசிப்பிள்ளை, 426. (தற்போதைய அங்கத்தவர்) — அதிகப்படி 420.

6-ம் வட்டாரம்: திரு. எஸ் சி. மகாதேவா, 628. திரு எல். எஸ். சண்முகநாதன், 469. திரு. வி. ஐயாத்துரை, 400. திரு. கே. எஸ். நடராஜா, 548. — அதிகப்படி 80.

7-ம் வட்டாரம்: திரு. ஏ. நடராஜா, 785. திரு. கே. துரைசிங்கம், 643. (தற்போதைய அங்கத்தவர்) — அதிகப்படி 142.

8-ம் வட்டாரம்: திரு. ஆ. துரைராஜசிங்கம், 916 (தற்போதைய அங்கத்தவர்). திரு.வி. கனகசபாபதி, 407. — அதிகப்படி 509.

9-ம் வட்டாரம்: திரு. எஸ். எஸ். நவரத்தினம், 783 (தற்போதையஅங்கத்தவர்).திரு. கே. ஐயாத்துரை, 519. — அதிகப்படி 264.

10-ம் வட்டாரம்: திரு. எம். கார்த்திகேசன், 1,275 திரு.ரி. எஸ். துரைராஜா, 1,160 (தற்போதைய அங்கத்தவர்). — அதிகப்படி 115.

11-ம் வட்டாரம்: ஹாஜி வி. எம். எம். அபூசாலி, 776 (தற்போதய அங்கத்தவர்).ஜனாப் எஸ். ஹபிப் முகம்மது, 647. — அதிகப்படி 129.

13-ம் வட்டாரம்: திரு. கே. வி. தேவேந்திரன், 538. திரு. எஸ். இராஜரத்தினம், 503. திரு. எம். பாலசிங்கம், 130. — அதிகப்படி 35

14-ம் வட்டாரம்: திரு. சி. முத்துத்தம்பி, 1,173. திரு. ஆர். சி. மன்மதராயன், 1,057 (தற்போதையஅங்கத்தவர்). —அதிகப்படி 116.

15-ம் வட்டாரம்: திரு. ஜே. எஸ். நிக்கலஸ், 489. திரு. ஐ. ஆர். அரியரத்தினம், 238. திரு. ஏ. விஸ்வநாதன், 350. திரு. ஈ. ரி. ஹிச்கொக், 167. — அதிகப்படி 139.

தற்போதைய 12-ம் வட்டார அங்கத்தவர் ஜனாப் காதி எம். எம். சுல்தான் போட்டியின்றி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

### மோட்டர்ரத விபத்து

யாழ்ப்பாண நகரசபைத் தேர்தல் தினமாகிய சென்றசனிக்கிழமைபகல் 11 மணியளவில் இரண்டாம்வட்டாரத்திலே முதலியார்வீதி-கிட்டங்கிவீதிச் சந்தியிலுள்ள ஓர்வீட்டின் விறாந்தைச் சுவர்மீது ஓர்மோட்டார்வான் சென்று மோதியகாரணமாக அவ்வீட்டுச்சுவரில் உட்கார்ந்திருந்த சுவாம்பிள்ளை சவிரிமுத்து செல்லத்துரை என்பவரின் இடதுகால் சுவருக்கும், வானுக்குமிடையில் அகப்பட்டுநெரிந்தது. அதனால்அவர் படுகாயமடைந்து இரத்தம் பெருகியபடியே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அன்றிரவே மரணமாயினர்.

### மந்திரியாருக்கு விஷேசஅதிகாரம்

அவசரகால நிலைமையின்போது, அல்லது அந்தநிலைமை ஏற்படக்கூடுமெனத் தோன்றும்போது, கவர்னர்–ஜெனறலுக்கு ஆலோசனைகூறுவதற்குக் கமத்தொழில்–உணவுமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுக்கு விசேஷஅதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தஅதிகாரத்தைப் பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் தந்திமூலம் அவருக்கு வழங்கியிருக்கிறார். பொதுசனபாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கைஎடுக்க இந்த அதிகாரம் அவசியமாகும். தீவிரவாதிகள் பொதுக்கூட்டங்களில் பேசியிருப்பதைக்கொண்டும், துறைமுகத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாகப் பயமுறுத்தியிருப்பதைக் கொண்டும் இந்நிலைமை ஏற்படக்கூடுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

### கவர்னர்--ஜெனறல் அவதூறுவழக்கு

இவ்வருடம் ஆடிமாதம் 1-ந் திகதியன்று கவர்னர்–ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலகஅவர்களை அவதூறுசெய்து "ரிறைண்" பத்திரிகையில் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்ததற்காகத் திருமதி தேஜா குணவர்த்தன எனும்பெண்ணின் மீது தொடரப்பட்டிருந்த வழக்கானது பிரதமநீதியரசர் உட்பட மூன்றுநீதியரசர்களால் பலதினங்களாகவிசாரணை செய்யப்பெற்றுச் சென்றவெள்ளிக்கிழமை தள்ளுபடலாயிற்று. அதற்குக் காரணம் எதிரிமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையேயாகும். இந்தவழக்கிலே உலகப்பிரசித்திபெற்ற ஆங்கிலவழக்கறிஞரான திரு. டி. எஸ். பிறிற் கியூ. சி. அவர்கள் எதிரிக்காகஏற்பட்டு வழக்கைநடத்தினர். சதாசிவம் கொலைவழக்குக்குப்பின் இலங்கைமுழுவதுமே பெரும்அருட்சியை உண்டுபண்ணியவழக்கு இதுவாகும்.

### புதிய வயோதிகர்சாலை

தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்ததிருநாளும், மரியாயின்புனிதவருடக் கடைசிநாளுமாகிய நேற்றுப்புதன்கிழமை மட்டக்களப்பிலே அமைக்கப்பட்டுள்ள புதியவயோதிகர்சாலையானது வறியவர்களின் சின்னக்கன்னியாஸ்திரிமார்களது மாகாண சிரேஷ்டதாயாரால் திறந்துவைக்கப் படலாயிற்று. இத்திறப்புவிழாவிற்கென்று சங். சிரேஷ்டதாயாரவர்கள் சிங்கப்பூரிலிருந்துவரலாயினர். அர்ச். சூசையப்பரின் நாமந்தாங்கிய இந்தப்புதிய வயோதிகர்சாலை நான்குகன்னியாஸ்திரிமாராலே பாராமரிக்கப்பட்டுவரும். கொழும்பிலும், ஏனையவிடங்களிலும் பாராமரிக்கப்பட்டு வருவனபோன்று வறியவர்களின் சின்னக்கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவரும் வயோதிகர்சாலைகளைத் தரிசித்தோர் அவர்கள் எத்துணைசிறப்பாய் அவைகளைநடத்திவருகின்றார்கள் என்பதை நன்கறிவார்கள். வயோதிகர்களான இந்த வறியவர்களை உணவூட்டி உடையளித்துப் பாராமரிக்கும்விஷயமாய் இந்த நல்ல கன்னியாஸ்திரிமார் பிறரின் தருமசகாயத்திலேயே தங்கியிருக்கிறார்கள் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

### லங்காமாதாவின் திக்விஜயம்

தேவத்தைத் திருசேத்திரத்தில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் பரிசுத்த லங்காமாதாவின் திருச்சுரூபமானது கடந்தபத்தொன்பதுமாதகாலமாகக் கொழும்பு அதிமேற்றிராசனத்தின் எழுபது விசாரணைப்பங்குகளுக்குப் பெரிய ஊர்வலமாகக் கொண்டு சென்று அங்கங்கெல்லாம் வணங்கிப் பக்திசெய்யப்பட்டு வந்தபின்னர் மரியாயின் புனிதவருட முடிவோடு அதன் திக்விஜயம் முடிவுக்கு வரலாயிற்று. இந்தவிஜயம் 1953-ம் ஆண்டு சித்திரை 13-ந் திகதி ஞாயிறுவாரம் ருகமத்துக்கு அளித்த முதற்தரிசனையோடு ஆரம்பமாகிக் கடைசியாகச் சென்ற 5-ந் திகதி ஞாயிறுவாரம் நாகொடைக்கு அளித்த கடைசித்தரிசனையோடு பூர்த்தியடையலாயிற்று. குறித்த பத்தொன்பதுமாதங்களிலும் விசேஷதிருவைபவங்களையிட்டு இடையில் ஆறுமுறைமாத்திரமே அது தேவத்தைத் திரும்பியிருக்கிறது. இந்தமகாஊர்வல முடிவுவிழா மாலைப்பெரியபாடற்பூசையோடும், மற்றும் வைபவங்களோடும் பக்திச்சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று.

### சுதேசவைத்தியகல்லூரி யூபிலி

கொழும்பிலுள்ள சுதேசவைத்திய கல்லூரி ஸ்தாபகமான 25-ம் ஆண்டு வெள்ளியூபிலிவிழா வருகிறதைமாதம் 5-ந்திகதிமுதல் ஏழுதினங்கள்வரையில் கொண்டாடப்பட விருக்கிறது. இவ்விழாவிற்குச் சமுகமளிக்குமாறு இந்தியாவிலிருந்து ஒருதொகையான ஆயுர்வேதவைத்தியர்களும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள்வரும்போது இந்தியாவிலிருந்து மருந்து எழுதிக்கொடுக்கும் புராதனமுறைகளையும், ஆயுர்வேத சத்திரவைத்திய சம்பந்தமான கருவிகளையும் கொண்டுவருவார்கள். அரசாங்க சுகாதாரப்பகுதியும் இவ்விழாவிலே கலந்துகொள்ளவிருக்கிறது.

### ஒரேயொரு வாக்குச்சீட்டால்

நுவரெலி நகரசபைத் தேர்தலும் சென்றசனிக்கிழமை மிக அமைதியாக நடைபெறலாயிற்று. இதிலே அந்நகரமேயர் திரு. வி. ஏ. விஜயரத்தினசிங்கம்அவர்கள் இலகுவிலேவெற்றிபெற்றுத் தமதுஸ்தானத்தை நிலைப்படுத்திக் கொண்டார். பாராளுமன்றத்திலே நுவரெலிப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரும், நுவரெலி நகரசபைத் தேர்தலில் இரண்டாம்வட்டாரத்துக்கு ஓர் அபேட்சகராக முன்வந்தவருமான திரு. பி. பி. சுமனதிலகஅவர்கள் ஒரேயொருவாக்குச்சீட்டால் தோல்வியடையலாயினர். இவருக்கு 85 சீட்டுகளும், இவருடன்போட்டியிட்ட ஆசிரியர் எஸ். பி. ஜயசேகரஅவர்களுக்கு 86 சீட்டுகளும் கிடைத்தன. ஆறும் வட்டாரத்துக்குப் போட்டியிட்ட திரு. கே. எம். எச். அரிதாஸ் சில்வாஎன்பவருக்கு 58 சீட்டுகளும், திரு. காதர்கான்என்பவருக்கு 56 சீட்டுகளும் கிடைத்தன. அதனால் இருசீட்டுகளாலே முந்தியவர் பிந்தியவரைத் தோற்கடிக்கலாயினர்.

### குழப்பத்தைத் தூண்டுகிறவர்கள்

நாட்டிலே நெருக்கடியான ஓர்நிலைமை தோன்றுங்காலத்தில் ஏற்படுஞ் சேதங்களுக்கு நஷ்ட பரிகாரமாகக் குழப்பங்களைத் தூண்டுகிறவர்கள்மீது ஓர் தண்டனைவரிவிதிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்தத்தீர்மானம் அரசாங்க உயர்தரஅதிகாரிகளுக்கும், நிர்வாகஅதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தொழிலாளர்யூனியன் வேலைநிறுத்தஞ் செய்யப்போவதாகப் பயமுறுத்தியிருப்பதே அரசாங்கம் இத்தகைய உடன்நடவடிக்கை எடுக்கக் காரணமாகும். அதேசமயத்தில் இடதுசாரித்தலைவர்கள் துறைமுகத்தொழிலாளர் யூனியனின் கோரிக்கைகள்பற்றியும், டிறெலிபஸ் பிரச்சினைபற்றியும் ஓர்வேலைநிறுத்தம் நடத்தப்போவதாகப் பயமுறுத்தி யிருக்கிறார்கள். அதனால் எச்சமயத்திலும் கடமையாற்றத் தயாராயிருக்கும்படி பொலிஸ் சேமப்படைக்கும், தொண்டர்படைக்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசம் இரட்சணியத்தின் சுவாசம்

[ சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ், மலாயா ]

(சென்றவாரத் தொடர்ச்சி)

அதேபோல, நாம் எவ்வளவுதான் ஞானசெல்வந்தராயிருந்தாலும், நம்மிலே ஞானஉயிராகிய அந்த விசுவாசம் இல்லாவிடின் அந்த ஞானச்செல்வத்தால் நமக்கொரு பிரயோசனமுமில்லை. ஏனெனில், ஞானஉயிரற்ற விசுவாசம் செத்தவிசுவாசம். அன்றியும், ஒரு பெருஞ் செல்வந்தன் தன் உயிருக்கு ஆபத்துவரப்போவதைக் கண்டால், சரீர மரணத்திலிருந்து தப்பிப்பிழைக்கத் தன்திரவிய முழுவதையும் இழக்க வேண்டி நேர்ந்தாலும் பின்வாங்க மாட்டான். ஏனெனில், அவனுக்கு உயிரிலும்பார்க்க அவனுடைய திரவியம் பெரிதல்ல. அதேபோல, நமது விசுவாசமென்னும் ஞான உயிரிலும் பார்க்க நமது உலகசெல்வசம்பத்தோ, அல்லது நமது சரீரஉயிர்தானே பிரமாதமானவையல்ல. விசுவாசமாகிய ஞானஉயிரைக் காப்பாற்றும்படி இவைகளை ஒருங்கேஇழக்க வேண்டிவரினும் நாம் அதற்குப் பின்வாங்கலாது.

ஏனெனில், "தன் விசுவாசத்தை மறுதலித்ததுரோகி ஒன்றுக்கும் உதவாத மனுஷன்" என்றும், "ஒருவன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன்ஆத்துமத்தைச் சேதப்படுத்தினல் அதனுல் அவனுக்கிருக்கும் பிரயோசனமென்ன?" என்றும் வேத வாக்கியங்கள் எச்சரிக்கின்றன. வேதகலாபனை நடந்துவரும் நாடுகளிலே கிறீஸ்தவர்களைப்பிடித்துச் சித்திரவதை செய்யப்போகையில் அவர்களிடம் வேதவிரோதிகள் கேட்கும் முதல் கேள்வி, "உன்விசுவாசத்தை மறுதலிக்கிறுயா, இல்லையா?" என்பதுதான். "ஒன்றில் மரணம், அல்லது மறுதலிக்க வேண்டும்; இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்" மறுதலித்தால் விசுவாசத்தின் ஞானஉயிர் கொல்லப்படும். மறுதலியாமல் விசுவாசத்தைக் காப்பாற்றுவது ஞானஉயிரைக் காப்பாற்றுவதாகும். "கடைசி பரியந்தம் நிலைநிற்கிறவன் எவனே அவனே இரட்சணியமடைவான்" என்று கர்த்தர்தாமே திருவுளம்பற்றியிருக்கிறுர். இந்தத்திருவாக்கைச் சிரமேற் கொண்ட எத்தனையோ அர்ச்சியசிட்டர்கள் மோட்சவாழ்வைப் பிறப்பிக்கும் தங்கள் விசுவாசத்தின் ஞானஉயிரைக் காப்பாற்றும் பொருட்டு எவ்வித சித்திரவதைக்கும், மரணத்துக்கும் அஞ்சாமல், தங்கள் இரத்தத்தைச் சிந்தி உயிரையும்கொடுத்து இன்று பரலோக இராச்சியத்திலே வேதசாட்சிகளாக மகிமைப்பிரதாபத்தோடு விளங்குகிறுர்கள். ஆகவே, எங்கள் மோட்சவாழ்வு உயிருள்ளவிசுவாசத்திலே தங்கியிருக்கின்றது. உயிருள்ளவிசுவாசிகள் தேவனுக்காகவும், தங்கள் இரட்சணியத்துக்காகவும் உதிரத்தைச்சிந்தி உயிரைத் தியாகஞ்செய்யவும் பின்வாங்கார்கள். மற்றப்படி, விசுவாசமில்லாது கோவிலுக்குப் போவதிலும், ஆராதனைகளிலே பங்குபற்றுவதிலும், செபங்களை மொலுமொலென ஓதுவதிலும் ஒரு பிரயோசனமுமில்லை. செத்த பிணத்தின் வாயினுள் பாலைப்பருக்கி ஆவதென்ன? சாப்பாட்டைத் திணித்தென்ன? உயிருள்ள மனிதனுக்குக் கொடுத்தால் அன்றே நன்மையுண்டாகும். சரீரம் வளர்ச்சியடையும். பலமேறும். சுகமாகவாழலாம். அதேபோல, ஆலயவழிபாடும், ஆராதனையும், செபங்களும் நமது ஆத்துமம் வளம்பெற்று உரம்பெற்றுச் செழித்தோங்கி வளர மிகவும்வேண்டிய ஞானப்போசனம் அல்லது பசளையாகும். உயிரற்றுப்பட்டுப்போன மரத்துக்குப் பசளையேன்?

ஆகவே, நமது ஆத்துமத்தின் ஞான உயிராகிய "விசுவாசம்" உயிரற்றதாயிருந்தால், முன்சொன்ன வழிபாடுகளால் ஆத்துமத்துக்கு யாதாமோர் பிரயோசனமுமில்லை. கிறீஸ்துநாதர் இந்த உயிருள்ள விசுவாசத்தை எவ்வளவாக விரும்புகிறுரென்றுல், தமது திருச்சபைக்குத் தலைவாக அர்ச். இராயப்பரை ஏற்படுத்தமுன் அவரை நோக்கி: "யோவானின் குமாரனுகிய சீமோனே! இவர்களிலும்பார்க்க நீ என்னை அதிகமாக நேசிக்கிறுயோ?" என மும்முறை விசுவாச உச்சாரணம் கேட்டார். (அரு. 21:15–17). "கடவுள் ஒருவர் இருக்கிறுர்" என்னும் உண்மையைமாத்திரம் நாம் விசுவசித்தல் போதாது. "பிசாசுகளும் விசுவசித்து நடுநடுங்குகின்றனவே" என்று வேதவாக்கியம் கூறுகிறது. (யாக. 2:19). ஆகவே, ஆண்டவரையும், அவரது திருவாக்குகளையும், அவர் கிரிகைகளையும், அவர் ஏற்படுத்திய திருச்சபையையும், அதன் போதகங்களையும், தேவதிரவிய அனுமானங்களையும் மனநேர்மையோடும், இருதயபூர்வமாகவும் நாம் ஏற்று விசுவசிக்கவேண்டும்.

கிறீஸ்துநாதர் தமது பூலோகசீவியத்தின்போது தம்மிடம் சகாயம்பெற வந்தவர்களைநோக்கி: அவருடைய முதற்கேள்வி, "இதைச்செய்ய என்னுல் முடியுமென்பதை விசுவசிக்கிறுயா?" என்பதுதான். அவர்கள் ஆம், ஆண்டவரே! என்று சொன்னுல், "நல்லது உன்விசுவாசப்படி உனக்கு ஆகக்கடவது" என்பார். அவர்களுடைய விசுவாசம் உயிருள்ள–உண்மையான விசுவாசமாயிருந்தால் தாங்கள் வேண்டிவந்த சகாயத்தைக் கண்டடைவார்கள். போலியான உயிரற்ற விசுவாசமாயிருந்தால் தாங்கள் ஆசித்த நன்மையைக் கண்டடையமாட்டார்கள். எனவே, அநுகூலமோ பிரதிகூலமோ எல்லாம் அவரவர் விசுவாசத்தைப் பொறுத்ததாயிருக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. நமது விசுவாசத்தை நாம் வாயினுல் மாத்திரம் அறிக்கையிட்டால் போதாது. நாம் அதை நமது வெளிக்கிரிகைகளிலும் அகத்தியம் காண்பிக்கவேண்டும். ஏனெனில், "ஓ, வீண் மனிதனே! கிரிகைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறதென்று அறியாயோ? ஆவியற்ற சரீரம் செத்ததாய் இருக்கிறதுபோல, கிரிகைகளில்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கின்றது என அறிந்துகொள்" என்று வேதம்உரைக்கிறது. (யாக. 2:20–26.) எனவே, நற்கிரிகைகளைக் கொண்டிராத விசுவாசம் எவ்வித பிரயோசனமுமின்றித் தன்னிலே செத்ததாய்க் கிடப்பதாகும்.

இனி, உயிருள்ள விசுவாசத்தின் சத்து எத்தன்மையது? "உயிருள்ள விசுவாசம்" மகாவலிமையுடையது. அதற்கு இரண்டு வல்லமைகள் உண்டு. எதையும் ஆக்கும், எதையும் அழிக்கும். உயிர்கொடுக்கும், மரணத்தை வருவிக்கும். ஆகவே, ஒரு பக்கத்தில் அது உயிர்தரும் ஞானசஞ்சீவி. மறுபக்கத்தில் அது எதனையும் நிர்மூலம் செய்யும் நாசகாரி. அணுக்குண்டு, சலவாயுக்குண்டு தன்னும் அதற்கு நிகராது. நாம் பொழியும் செபங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அணுக்குண்டுக்குச் சமானம். இவற்றிலும் சிலகுண்டு பொய்க்குண்டாய் இருப்பதுண்டு. இந்தக்குண்டு வெடிக்காது. ஏனெனில், அதனை வெடிக்கச்செய்யும் பிரதான மருந்துச்சத்து அதிலே இல்லை. அவ்வாறே நமது செபமென்னும் குண்டுகளுக்கு "உயிரும் சத்து மாயிருப்பது" விசுவாசம். இவ்வித சத்துநிறைந்த விசுவாசமில்லாத செபம் பலிதமற்ற வெறும் ஊமைக் குண்டுக்கு நிகராகி, எவ்விதநன்மையுமற்றதாய்த் தேவசமூகத்தில் ஒருபக்கமாய் ஒதுக்கிவிடப்படும். விசுவாசம் நிறைந்த செபமோவெனில் எந்தமலையையும் பெயர்த்தெறியும் வலிமை கொண்டது.

(தொடரும்)

# வேத விஞவிடை

## விஷயத்திட்டம்

| விசு. பிரமாணம் | அதின் விரிவு |
|---|---|
| I. பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன். | 1. சீவனுள்ள மெய்யான தேவனும், இயற்றப்படாதவரும், சிருட்டிக்கப்படாதவரும் பிறக்காதவருமாகிய பிதாவானவர் ஒருவர் இருக்கின்றுர்.— (அதனுசி விசு. பிர. 2). |
| II. (இவர் சகலத்தையும்) படைத்த சருவத்துக்கும் வல்லவர். | 2. இவர் தமது சர்வவல்லமையினுல், தம்முடைய ஆனந்தத்தை அதிகப்படுத்தவுமல்ல அடைந்துகொள்ளவுமல்ல, தாம் சிருட்டிகளுக்குக்கொடுத்த நன்மைகளிலிருந்து தமது நன்மைத்தனத்தைக் காண்பிக்கவே, காலத்துவக்கத்தில் அரூபிகளையும் சடப்பொருட்களையும், பின்பு அரூபியும் சடப்பொருளும்சேர்ந்த மனிதரையும் சிருட்டித்து —<br>3. மனித புத்தியின் இயற்கையான வெளிச்சத்தைக் கொண்டு, சிருட்டிக்கப் பட்டவைகளிலிருந்து அவைகளின் ஆதிகாரணரான தாம் இருக்கிறுரென்றும்,<br>4. தாம் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் கர்த்தாவானவர், சர்வவல்லவர், நித்தியர், அநந்தர், அளவற்ற ஆழமுள்ளவர், புத்தியிலும் சித்தத்திலும் ஒவ்வொரு இலட்சணத்திலும் மட்டற்றவர், பாகமும் மாற்றமுமில்லாத ஏகஅரூபியானவர், உலகத்தில்நின்று வஸ்துத்தன்மையிலே உண்மையாகப் புறம்பானவர், தம்மிலேயும் தம்மாலேயும் மிகப் பாக்கியமுள்ளவர், இருக்கின்றதும் இருக்கக்கூடியதுமான சகலத்திற்கும் மேலாகச் சொல்லமுடியாத விதமாய் உன்னதமானவர் என்றும்,<br>5. தமது சர்வ கர்த்தத்துவத்தை ஏற்றுத் தம்மை ஆராதிப்பது எல்லாருடையவும் கடமை என்றும்,<br>6. தாம் நமதுமேல் கொண்டிருக்கும் மேற்சுபாவ நோக்கங்களைத் தெரிவிப்பதோடு தம்மைப்பற்றி நமக்குள்ள இயற்கையான அறிவைத் திருத்தவும் அல்லது உறுதிப்படுத்தவும், புதுமையான வெளிப்படுத்தலைத் தந்திருக்கிறுர் என்றும் காண்பிக்கின்றுர். —(உரோ. I. 19–20; வத்திக்கான் சங்., இருக்கை III, அதி. 1&2; மத். XVI. 17; லூ. X. 21) |
| III. (இவர் எங்களைப்) பூலோகத்தில் (பராமரிப்பவர்.) | 7. இவர் தமது தேவாதீனத்தினுல் சகலசிருட்டிகளையும் கவனித்து ஆண்டுநடத்தி, ஒருகோடியினின்று மறுகோடிவரைக்கும் பலமாய்ச்சென்று, சகலத்தையும் இனிதாய் ஒழுங்குபடுத்துவதுமன்றி, நமது ஆதிபிதாமாதாவிடமிருந்து அவர்கள்இழந்துபோன பிரசாதநிலைக்குப் பதிலாகப் பாவதோஷத்தைச் சென்மத்தின் வழியால் பெற்ற நம்மை, தமதுசுதனுடைய பேறுகளின்நிமித்தம், திரும்பவும் தம்மிடம் வரவழைத்து —<br>8. தமது சித்தத்தைத் தெரிவிக்கின்ற வெளிச்சப் பிரசாதத்தினுலும்,<br>9. தமது வல்லமையைத் தருகின்ற துணைப் பிரசாதத்தினுலும்,<br>10. தமது மகிமையைப் பின்பன்றச் செய்கின்ற ஏவற் பிரசாதத்தினுலும்,<br>11 சோதனையை அகற்றுகின்ற மனந்திருப்பும் பிரசாதத்தினுலும்,<br>12. பாவத்தை மன்னிக்கிற பொறுதிப் பிரசாதத்தினுலும்,<br>13. நரகதின்மையில்நின்று காப்பாற்றுகின்ற இரட்சிப்புப் பிரசாதத்தினுலும்,<br>14. திருச்சபையால் மேய்க்கிற அழைப்புப் பிரசாதத்தினுலும் நம்மைத் தம்மிடம் இழுக்கக் கருணைகொண்டார். —(வத்திக்கான் சங்., இருக்கை III, அதி. 1; திறென்தையின் சங்., இருக்கை V; அரு. VI. 44; மத். VI. 9–13) |
| IV. (இவர் எங்களுக்குப்) பரலோகத்தைக் (கதியாக முன் நியமித்தவர்.) | 15. இவர் தமது அளவற்ற நன்மைத்தனத்தினுல் சுபாவத்திற்கு மேலானதும், மனித புத்திக்குச் சற்றேனும் எட்டாததுமான பேரின்பபாக்கியத்திற்கு நம்மை முன்நியமித்தருளி—<br>16. அந்தப் பேரின்பபாக்கியம் அழிந்துபோகிற சரீரத்தின்சாவிலே நமக்குத் திட்டமாக்கப்படவும்,<br>17. ஒருபோதும் அழியாத ஆத்துமத்திலே நமக்குப் பூரண திருப்தியை உண்டுபண்ணவும் சித்தமானுர்.—(வத்திக்கான் சங்., இருக்கை III, அதி. 2; ஆதி. II; ஞாஞ. III. 4) |

— போலாந்தின் தலைப்பட்டணமாகிய வார்சோநகர துணைமேற்றிராணியாரான பறனிக்கா ஆண்டவர் கம்யூனிஸ்த நீதிஸ்தலம் ஒன்றில் அந்தரங்கமாக நடத்திய ஓர் விசாரணை முடிவில் இருபதுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறுரென வார்சோநகரிலிருந்து ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



## பழிவாங்கிய கம்யூனிஸ்தர்கள்

கம்யூனிஸ்தநாடுகளில் ஒன்ருகிய யூகோசிலேவியாவிலே சாகிறெப்நகரில் சகல அர்ச்சியசிட்டர்களின் திருநாளாகிய சென்ற கார்த்திகை 1-ந் திகதிக்கு முதல் நாள் அங்குள்ள சேமக்காலையிலிருந்து திரும்வண்டிஒன்று கத்தோலிக்கரைத் திரளாகஏற்றிக்கொண்டு திரும்பியபோது, புரண்டுவிட்டது. அன்றுதினம் சேமக்காலைகளை அவர்கள் சந்திப்பது பாரம்பரியமான ஓர் வழக்கமாகும். இந்தவிபத்தாலே பன்னிருவருக்குமேல் இறந்துபோக, மற்றும்அநேகர் காயமடைந்தார்கள். மூன்று மேற்றிராணிமாரும், ஒரு தொகையான குருமாரும் பதினைந்துநிமிஷத்துள் விபத்து நிகழ்ந்த இடத்தைப் போய்ச் சேர்ந்தார்கள்.

சாகிறெப்நகரின் துணைமேற்றிராணியாராகப் புதிதாகநிய மனம்பெற்ற செபர்ஆண்டவர் ராக்ஸிமூலம் உடனேதானே அங்குபோய்ச்சேர்ந்தார். மற்றிரு துணைமேற்றிராணிமாரும் கார்மூலம் அவரைப் பின்தொடர்ந்துபோயினர். விபத்தில்இறந்தவர்களுக்காக வீதியில்நின்று செபமாலையும், மற்றுஞ்செபங்களும் சொல்லிக்கொண்டிருந்த 5,000 பேரைக்கொண்ட சனக்கூட்டமானது, அவ்வேளை அங்குசமுகமளித்த குரோத்தியமாகாண அரசாங்க தலைவரான ஜோசிப் பகாறிச் என்பவரைப் பொருட்படுத்தவில்லை.

இதற்குப் பழிவாங்குமுகமாக ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று காயமடைந்தவர்களைச் சந்தியாது மேற்றிராணிமாரும், குருமாரும் கம்யூனிஸ்தபொலிசரால் தடுத்துவிடப் பட்டார்கள். இறந்தவர்களின் இனசனரைக் கம்யூனிஸ்த அதிகாரிகள் அழைத்துச் சமயதிருச்சடங்கு எதுவும்இல்லாமலே அடக்கஞ் செய்ய வேண்டுமெனச்சொல்லிப் பிரேதங்களைஅவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஆனல், அவர்களோ அதற்கு உடன்படவில்லை. சாகிறெப்நகர் ஆசனக்கோவிலில் இறந்தவர்களுக்காக நிறைவேறிய மரித்தோர்பாடற்பூசைக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சமுகமாயிருந்தார்கள்.

## "பன்னிரு அப்போஸ்தலர்"

இற்றைக்கு 70 வருடங்களின் முன் லண்டன்நகரிலே பிரித்தானிய மியூசியத்தில் ஓர் சிவிலுத்தியோகஸ்தரான திரு. ஜேம்ஸ் பிறிற்றென் அவர்கள் உத்தியோகம் பார்த்துவந்தார். ஓர் நாள் அவர் லண்டன்நகரிலே உலாவிக்கொண்டிருந்தபோது அச்சுப்பிரசுர நிலையங்களின் சன்னல்களுக்கூடாகப் பார்த்தார். அவற்றுள் ஒன்றிலே புறொட்டஸ்தாந்தசபை ஒன்ருலே பிரசுரஞ் செய்யப்பட்ட பென்னிநாணயம் பெறுமதியான துண்டுப்பிரசுரங்களைக் கண்ணுற்ருர். அவைகளெல்லாம் கத்தோலிக்க திருச்சபையைத் தாக்குவனவாய் இருந்தன. அப்போதுதானே அவர் கத்தோலிக்க திருச்சபையின் போதனையை விளக்குவனவும், புறொட்டஸ்தாந்த பிரசாரத்தைப் பொய்யென்று கண்டிப்பனவுமான துண்டுப் பிரசுரங்களே கத்தோலிக்க திருச்சபைக்குத் தேவைப்படுவன என்பதைக் கண்டுகொண்டார். இந்த யோசனையை அவர் தமதுநண்பர்கள் பன்னிருவருக்குத்தெரிவித்தார். அவர்களும் இதுவிஷயமாய் அவருக்குத் துணைச்செய்யச் சம்மதித்து, ஒவ்வொருவரும் ஒவ்வோர்பவுண் உபகரித்தனர். இந்தப் பன்னிரண்டு பவுண்களையும் மூலதனமாகக்கொண்டு "பன்னிருஅப்போஸ்தலர்கள்"எனத் தம்மை ஆதரிக்கத்தொடங்கிய அவர்களின் துணையோடு அவர் "கத்தோலிக்க சத்தியப் பிரசுர சபை"யை அடியிட்டார். அது முதல் இந்தச்சபையானது ஏழு கோடிக்குமேற்பட்ட கத்தோலிக்க துண்டுப் பிரசுரங்களைப் பரப்பியிருக்கிறது. வருடந்தோறும் அது பரப்பிவருவது 25 லட்சமாகும். இவற்றில் அநேகம் பிறபாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அப்போது சால்போட்டின் மேற்றிராணியாராயிருந்த கருதினல் வான்ஆண்டவர் உட்படப் பன்னிருவரை அங்கத்தவராகக் கொண்டிருந்த இச்சபை காலகதியில் விருத்தியடைந்து தற்சமையம் 20,000அங்கத்தவர்களைக் கொண்ட ஓர்பெரிய சைனியமாகத் திகழ்கின்றது.

## நான் ஓர் கத்தோலிக்கபெண்

இந்தோ-சீன சமாதானம் பற்றிய உடன்படிக்கை கையெழுத்தான ஜெனிவாமகாநாட்டின்போது அந்நகர வானெலி அறிவிப்பாளியாகத் திருமதி ஹெலன் ஒபேட்என்ற ஓர்கத்தோலிக்கமாது பணியாற்றிவந்தாள். ஆனல், மகாநாடுதொடங்கிய சிலநாட்களின்பின் அவள் வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். ஜெனிவாவானெலியில் நாள்தோறும் அவளுடையகுரலொலியைக் கேட்டுப்பழகினவர்களுக்கு இது ஒருபுதிராகவே இருந்தது. அந்தக் குரலொலி அமுக்கப்பட்ட வரலாறு தற்போது வெளியாகியுள்ளது.

அம்மகாநாட்டிற் கலந்துகொண்ட சீனத்தூதுக்கோஷ்டியால் அளிக்கப்பட்ட ஓர்வரவேற்பு உபசாரத்திற்குத் திருமதிஹெலனும் அழைக்கப்பட்டிருந்தாள். எம். மொலற்ருேவின் பதிலாளியாகவந்திருந்த ஓர்சோவியற் இராசீய தூதருக்கு அவள் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டாள். அவள் உக்ரேனியரான பாட்டனர் ஒருவரைக் கொண்டிருப்பதாக அறியவந்த அந்தச்சோவியற் தூதர் ருஷியபாஷையிலே அவளுடன்சம்பாஷித்தார். பின்னர் சீனக்கம்யூனிஸ்த தலைவரான மாவோ ரிஸி ரங் என்பவரின் நலத்திற்காகப் பானம் அருந்த வேண்டுமென்று அவ்வரவேற்பிலே அவளைக் கேட்டுக்கொண்டார்.

அதற்குத் திருமதிஹெலன், "நான் ஒருகம்யூனிஸ்துஅல்ல; ஆயினும் சீனமக்களுக்காக, அவர்களின்நலத்துக்காக அல்லது சமாதானத்துக்காகத்தான் பானம்அருந்துவதாகக் கூறினள். ஆனல், அவள் சீனப்பிரதமரின் நலத்துக்காகப் பானம் அருந்தவேண்டுமெனச் சோவியற்பிரதிநிதி பிடிவாதமாகநின்ருர். அப்போது ஹெலன், "நான் ஓர் கத்தோலிக்கபெண்; கம்யூனிஸத்துக்கு எதிரானவள்; நான் பானம்அருந்துவது சியாங் கேய்-ஷெய்க்கின் நலத்திற்காகவே" எனமொழிந்தாள். இது அங்கு சமுகமாய் இருந்தவர்கள்மத்தியில் ஓர்பரபரப்பை எழுப்பியது. திருமதி ஹெலன் வரவேற்பினின்றும் வெளிகொண்டாள். இருதினங்களின்பின் அவளுடையசேவை இனிமேல் தங்களுக்கு வேண்டியதில்லையென்று ஜெனிவா வானெலி அதிகாரிகள் அவளுக்குத்தெரிவித்தார்கள்.

## ஸ்பானியமக்களின் முன்மாதிரிகை

சுமார் 800 வருடங்களுக்கு முந்திய சிலசுரூபங்கள்உட்படத் தேவதாயாரின் 21 சுரூபங்களைத்தாங்கிய பலிபீடம் ஒன்றிலே ஸ்பானியதேச ஸறகோஞநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் டே அரிபா ஆண்டவர் சமீபத்திலே பெரியபாடற்பூசை நிறைவேற்றித் தமதுமேற்றிராசனத்தில் குடும்பசெபமாலைப் படையணியை ஆரம்பித்து வைத்தார். ஸறகோஞநகர் ரோமரின் ஸ்பானிய தலைநகராயிருந்தபோது திருஜன், அதிரியான்எனும் ரோமைச் சக்கிரவர்த்திகள் சஞ்சரித்திருந்த போஞ்சியுபிலாத்துவின் கோட்டைநிழலிலே குடும்பசெபமாலைப் படையணியின் அப்போஸ்தலரான வண. பற்றிக் பெயிற்றன்சுவாமியார் 47,000 மக்களுக்குமேல் குழுமியிருக்க, ஸ்பெயினிலே தமதுபடையணியின்கடைசியானமகாநாட்டிலே ஸ்பானியபாஷையில் பேசியபோது, "ஸ்பானியமக்கள் தேவதாயாரில் கொண்டுள்ள பக்தியும், அன்பும் உலகமுழுவதக்குமே பின்பற்றத்தகுந்த ஓர்முன்மாதிரியாகும்" எனக் கூறிநின்ருர். கடந்தசிலவாரங்களாக ஸ்பானியதேச விக்ரோறியா, பில்பாவோ, சான்செபஸ்ரியன், ஸறகோஞமேற்றிராசனங்களில் மகாநாடுகள்நடத்தி 4,10,000 மக்களுக்குக் குடும்ப செபமாலைப் படையணியைப்பற்றிப் பேசியபின் சுவாமியார் பம்பாய்நகர் அகிலஇந்திய மரியாயின் மகாநாட்டுக்கு வந்திருக்கின்ருர்.

## ஐந்துமாத காலத்தில்

27 வருடகாலம் திருத்தொண்டாற்றியபின் நாடுகடத்தப்பட்டவரும், உலர்ந்த லாசறுவின் சபைக்குரவருமான வண. ஜே. ஹெறிஜேர்ஸ்சுவாமியார் சமீபத்திலே போர்மோசாதீவுக்குச் செல்லும்வழியில் சிலமணிநேரம் கொழும்பில் தங்கிப்போயினர். இவர் கொழும்புவந்து சேர்ந்தபோது, அவரது மருகரும், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியிலே கடமையாற்றிவருகிறவருமான வண. ஏ. வாசென்பேர்க்சுவாமியார் அங்குசென்று அவரைச் சந்திக்கலாயினர். கொழும்பிலே பத்திரிகைநிருபர் ஒருவர் சுவாமியாரைப் பேட்டி கண்டு பேசியபோது அவர்கூறியதுவருமாறு: ஐந்துமாத காலத்திலே கத்தோலிக்கதிருச்சபையை இருந்தவிடமுந்தெரியாது அழித்தொழித்துவிடுவதாகச் சீனக்கம்யூனிஸ்தர்கள் வாய்ப்பறை அறைந்துகொண்டு தங்கள்ஆட்சியைத் தொடக்கினர்கள். ஆனல், இன்ருே ஐந்துவருடகால கம்யூனிஸ்த ஆட்சியின்பின்னரும் கத்தோலிக்கமக்கள் எக்காலத்திலும் பார்க்க அதிகம் திடசித்தமாக வேதகலாபனையை எதிர்த்து நின்றுபிடிக்கின்ருர்கள். எனதுஅபிப்பிராயப்படி, சீனமக்களில் நூற்றுக்குத் 98 விகிதமானோரும் கம்யூனிஸ்தஆட்சிக்கு முழுமாருயிருக்கின்ருர்கள். பிறநாடுகளின் வல்லரசுகள் வந்து தங்களைவிடுவிக்குமென அவர்கள்நம்புகிருர்கள். கம்யூனிஸ்தர்கள் சீன அரிசியைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிருர்கள். ஆனல், சீனமக்கள் பட்டினியால்வாடுகிருர்கள்.

## லூவெயின் சர்வகலாசாலை

உலகிலுள்ள மாபெரும் கத்தோலிக்க கலாசாலைகளில்ஒன்ருன பெல்ஜியதேச லூவெயின் சர்வகலாசாலையின் அதிபராக 1940-ம் ஆண்டுமுதல் இருந்துவருகிறவரான ஹனோர். வன்வோயென்பேர்க்சுவாமியார் ஓர் மேற்றிராணியாராக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவர் கத்தோலிக்க சர்வகலாசாலைகளின் சர்வதேச அதிபர்கள்சங்க தலைவருமாவர். லூவெயின் சர்வகலாசாலையில் பேராசிரியர்களும், போதகாசிரியர்களுமாக 470 பண்டிதர்கள் அநேகநாடுகளைச்சேர்ந்த பதினையிரவருக்குமேற்பட்ட மாணவர்களுக்குக் கல்விபயிற்றிவருகின்ருர்கள். அதன் பிரஸ்தாபம் பெற்ற நூல்நிலையம் இருஉலகயுத்தங்களிலும் இருமுறை தீயால் சேதமடையலாயிற்று; ஆயின் இருமுறையும் திரும்பக் கட்டப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாதம்

பொதுக் கருத்து :— மாசற்ற கன்னிமரியாயின் வழியாக மக்களிடையே சமாதானத்தின் அரசாட்சி வந்து சேர வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து :— இந்தியாவில் மேலானவகுப்பினர் கிறீஸ்துநாதரை அறிந்து அவரைப்பின்பற்ற ஆசிக்கும்படியாய் மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
மார்கழி மாதம் 9-ந் திகதி

# எதிர்நோக்கியிருந்த திருமீட்பர்

ரோமைநகரம் நிர்மாணித்து முடிந்த எட்டாம்சதாப்த மத்தியிலே, கலியுகம் 3,000 வரையிலே, கடவுட்சிந்தனையுள்ள சகலமனுஷர் இடத்திலும் ஒரு மகா நம்பிக்கை முகைகட்டிக்கொண்டு இருந்தது. ஆராய்வுள்ள மனிதர்எல்லாரும் பலஸ்தீனஎன்னும் யூதேயாநாட்டை நோக்கிப் பார்த்தவண்ணமாய் இருந்தார்கள். மெதித்திரேனிய கடலை அண்டிய சீமைகளில் வாழ்ந்தவர்கள் எழுவான்திசையில்நின்றும் ஒருமீட்பர் வருவார் என்று காத்திருக்க, பார்சிய குடாக்கடலைச் சார்ந்தசனங்களோ படுவான்திசையை ஏறெடுத்துநோக்க, இப்படியே உலகம்முழுவதும் மானிடரைமீட்கும் மகாநுபாவர்ஒருவர் எப்போது வருவார்! வருவார்! என்று காதலித்துக்கொண்டு இருந்தது.

யூதேயாநாட்டாரான இசிறவேலர்இடத்திலே பூர்வகாலத்துப் பாரம்பரியங்களையும், வரப்போகிறமீட்பரைப்பற்றிய தேவவாக்குத்தத்தங்களையும் அடக்கிய தீர்க்கதரிசன புத்தகங்கள் சிலஇருந்தன. ஆயினும், நாம் சுட்டிப்பேசும் அக்காலத்தில், இசிறவேல்மக்களுள் அநேகருக்கு அப்புத்தகங்கள் வாய்கட்டிய நூல்களாய்ப் போயினமையால், அவர்களும் தாங்கள் காத்துவைத்திருந்த ஏடுகளின்பொருளைச் சரியாய்வாசித்து விளங்கிக்கொள்ளக் கூடாதவர்களானார்கள். வரப்போகிறவரின் மகிமை, வல்லமைமுதலிய பிரதாபங்களைப்பற்றிய விசேஷங்களோ பாரம்பரியமாய்ச் சனத்துள்பரந்து செறிந்திருந்தன. ஆகவே, சாமானிய சனமெல்லாம் மீட்பராகிய மேசியாஎன்பவர்வந்து, தங்கள்தேசத்தைச் சீர்ப்படுத்தியும், செல்வத்தைப் பெருக்கியும் தங்கள்சாதி உலகத்திற் துலங்கி விளங்கச் செய்வார்என்றுகாத்திருந்தது. தேவபத்தியும், மனத்தாழ்ச்சியுமுள்ளோராயிருந்த நல்லஇசிறவேலரோ மேசியாவானவர் ஆத்துமாக்களைப் பாவதாசிகத்தில் நின்றும் விடுதலையாக்கிக் கரையேற்றுகின்ற மீட்பராய் எழுந்தருளுவாரென்னும் ஞானநம்பிக்கைபொருந்தி, அவர் எப்போதுவருவாரோஎன்ற ஆசைமூண்டோராய், அவர் தமதுவருகையைத் தீவிரிக்க வேண்டுமென்று கருணையங் கடவுளை நோக்கி அனலான விண்ணப்பங்களைச்செய்வோராயிருந்தார்கள்.

இக்காலத்துக்கு ஐஞ்ஞூற்றுச் சொச்ச வருஷங்களின்முன்னே இசிறவேல் சனத்துள் எழுந்து விளங்கின தானியேல் என்னும் தீர்க்கதரிசியானவர் மேசியா வரப்போகிற சரியான காலத்தைத் தேவஅருளினால் அறிந்து சொல்லியிருந்தார். அவருடைய தீர்க்கதரிசனப்படி ஜெருசலேம் பட்டணத்தின் இடிநத மதில்களைஎழுப்ப இராசகட்டளை பிறந்தநாட்தொடங்கி 70வருஷவாரங்கள், அதாவது ஏழு எழுபது அல்லது 490 வருஷங்கள் சென்றபின்பு 70-ம் வருஷ வாரத்தின்நடுவில் மேசியா வருவாரென்று இருந்தது. (தானி. 9: 25–27). அத்தீர்க்கதரிசனம் குறித்த காலமும் இதுவே ஆயிற்று.

தானியேலின் காலத்துக்குப் பதினைந்து சதாப்தங்களின் முன் இசிறவேலருடைய முற்பிதாவாகிய யாக்கோபு என்பவர் மரணப்படுக்கையிற் கிடந்துகொண்டே பின்வரும் தீர்க்கதரிசனத்தைச் செப்பியிருந்தார். "அனுப்பப்படப் போகிறவர் வருமட்டும் யூதாவிடத்தில் இருந்து செங்கோலாவது, அக்கோத்திரத்தின் அதிபதியாவது எடுபடுவதுஇல்லை. வரப்போகிற அவரைச் சாதிகள் எதிர்நோக்கி இருப்பார்கள்"(சனிப். 49 : 10). இந்தப் பவிஷிக தரிசனவாக்கும் மேசியா தோற்றவேண்டிய காலத்தையே குறித்ததுஎன்று யூதர்நம்பிக்கொண்டு இருந்தார்கள். இனி, யூதருடையஇராச்சியமோ கி. மு. 38-ம் ஆண்டின் ஈற்றில் அழிந்து போயிற்று. யூதர்சாதியை ரோமர்அடிப்படுத்திக்கொண்டதினால் யூதருக்குள்ளிருந்த கடைசிஅரசனை அந்திகோன்என்பவன் அந்தஆண்டிற் கொல்லப்பட, அவனிடமாய் இதுமியதேசத்தானை ஏரோது ரோமைஇராச்சியத்தாரின் பிரதிஇராசா ஆக்கப்பட்டான். இவ்வாறே யூதாவில் நின்றும் செங்கோல்புறப்பட்டு அன்னியன்ஒருவன் யூதாவை ஆளத் தொடங்கிவிட்டபடியால் யாக்கோபு சொல்லியகாலமும் ஆகிவிட்டது.

பத்தியுள்ள இசிறவேலர் முற்காலம் தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகையை இரந்துமன்றாடிச்செய்த பிரார்த்தனையைத் தாங்களும் இரட்டித்து இரட்டித்துச்சொல்லி, அவர் வருகையை அதிஆவலாய் வாஞ்சித்துத் தேடுவோரானார்கள். "வானங்களே! பனிப்பெய்யுங்கள். மேகங்களே! நீதிமானைவரை இறங்கச் செய்யுங்கள்; பூமியானது தனது அகட்டைத் திறந்து மீட்பரைப் புஷ்பிக்கச்செய்வதாக... கர்த்தாவே! பரமண்டலங்களின் உந்நதத்திலநின்றும் கண்ணோக்கும். தேவரீருடைய பரிசுத்த பிரதாபம்நிறைந்த இருப்பிடத்தில்நின்று எங்கள்பேரில் கடாட்சம்பண்ணும்....தேவரீரே எங்கள்பிதா; ஆபிரகாம் எங்களை நினைவுகூரார். நாங்கள் யாரென்று யாக்கோபுவும் அறியார். ஆனால், சதாகாலமும் சீவியரான கர்த்தாவே! தேவரீர் தாமே எங்கள் பிதாவும் மீட்பரும் அல்லவோ?....ஆ, ஆ, வானங்களைக் கிழித்துக்கொண்டு தேவரீர் இறங்கிவருவீர் ஆனாலோ!" (இசை. 45: 8–53; 15–54; 1) "சகல லோகங்களுக்கும நாயகரே! கடவுளே! எங்கள்மேல் இரக்கமாயிரும். எங்கள்மேற் கடைக்கண்நோக்கம் செய்து, தேவரீருடைய இரக்கங்களின்பிரகாரம் எங்கள் கணகளை ஒளிரப்பண்ணும்....தேவரீருடைய நாமத்தால் அழைக்கப்படுகிற இந்தச் சனத்தின்மேல் கிருபையாயிரும்....தேவரீர் உம்முடைய தலைச்சன் பிள்ளையாகப் பாவித்துவந்த இசிறவேல் சனத்தின் மேல் தயையாயிரும். சீயோனை உமது உரைக்கு அடங்காத திருவாக்குகளால் நிறையப்பண்ணும். உமதுசனத்தை மகிமையால் பூரிப்பியும். ஆதிதொட்டு உம்முடைய சிருட்டிகளாய் இருக்கிறவர்களுக்குச் சாட்சிகொடுத்தருளும. உமது திருநாமத்தால் முற்காலம் தீர்க்கதரிசிகள் செப்பியவாக்குகளை நிறைவேற்றியருளும்" (எக்கிளே. 33: 1-19).




## சதாசகாயமாதா கோணம்

### "பாவிகளின் அடைக்கலம்"

மரியாய் எங்கள் சதாசகாய மாதா. ஏனெனில், அவ பாவிகளுக்கு அடைக்கலமாய் இருக்கிறு. இந்த உலகத்துக்குத் தமதுதேவசுதனை ஈந்ததினால், பாவத்தினாலே தேவனின் ஐக்கியத்தையும், நேசத்தையும் இழந்தபாவிக்குப் பாவப்பொறுத்தலையும், தேவவரப்பிரசாதத்தையும் அடையும்வழிவகையையும் பரமகடவுள் கொடுத்துதவலானார்.

தேவமகிமைப்பிரதாபத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித் தேவன் பக்கமாகச் செல்லப் பின்வாங்குபவர்கள், அந்தப் பரமதேவனே தமது திருச்சுதனோடு பரிந்துபேச நமக்கு ஒரு அப்புக்காத்தையும் கொடுக்கத் திருவுளங்கொண்டாரென அறிவார்களாக என்று அர்ச். வேணாட் சொல்லுகிறுர். இந்தஅப்புக்காத்து நம்சதாசகாயமாதா தான். பாவிகளைத் தேவனோடு சமாதானபபடுத்தவும், மனந்திரும்பித் தேவனையடைந்தவர்கள் திரும்பவும் பாவத்தில்விழாது காப்பாற்றவும் தேவதாயார் உலகத்துக்குக் கொடுக்கப்பட்டார்.

மானிடசிருட்டிகள் எல்லாவற்றுள்ளும் சென்மபாவத்திலிருந்தும், அதன் கேடுகளிலிருந்தும் காப்பாற்றப்பட்ட ஒரேயொரு சிருட்டி பரிசுத்த தேவதாயார் மாத்திரமே. எனவே, அவவுடைய வல்லபம்பொருந்திய பரிந்துபேசுகையில் நம்பிக்கைவைத்து, அவவின் அடைக்கலத்தை நாடிச்சென்றால், பாவச்சகதியில் நாம் விழநேரிடும்போது, அதிலிருந்து திரும்ப எழும்புதற்கு வேண்டிய பெலனையும், தைரியத்தையும் நமக்குக்கொடுப்பா என்பது திண்ணம்.

கத்தோலிக்க திருச்சபையின் வர்த்தைகளில் "என்னைக்கண்டடைபவன் சீவியத்தைக் கண்டடைகிறுன். கர்த்தரிடமிருந்து இரட்சணியத்தையும் பெற்றுக்கொள்ளுகிறுன்" என்பது தேவமாதா பாவிகளுக்குஅனுப்பும் அழைப்புப்பத்திரம் என்று சொல்லலாம்.

எங்கள் பாவச்சோதனை வேளைகளில் தேவதாயாரைக் கூவிஅழைக்கும போதெல்லாம் நாம் பிசாசைப் படுதோல்வி அடையப் பண்ணுகிறோம். நமக்கு நிச்சயமாக வெற்றியை ஈட்டிக்கொள்ளுகிறோம். தமது கன்னித்தாளால் நரகசர்ப்பத்தின் தலையைநசித்துச் சாத்தானின் ஆதிக்கத்தை முற்றாய் ஒழிக்க வல்லபம்மிக்கதாய் நமது சதாசகாய மாதா. அவ நமது "புதியஏவாள்." முதலாம் ஏவாளோ "மரணத்தின்மாதா." சதாசகாயமாதா "சீவியத்தின் தாய்." அவமூலமாகப் பாவப்பாறையில் மோதுண்ணுது நாம் காப்பாற்றப்படுகிறோம் என்பதை மறக்கவொண்ணுது. தேவதாயார்மூலமாகச் சாத்தானின் சத்துவங்கள் குறைக்கபபட்டிருக்கின்றன. அவவின் அடைக்கலத்தில் இருப்போருக்கு–அவவின் அடைக்கலத்தைத் தேடுவோருக்குப் பிசாசு எதுவிதமோசமும் செய்யமுடியாது. தேவதாயாரது ஓயாதசகாயம் சாத்தானுக்கு ஒழியாததோல்வி.

ஆகவே, மாசில்லாத மாதாவாம் நமது நல்லதாயாரை அண்டிப்போவோமாக! பாவிகளின் அடைக்கலத்தைப் படைக்கலமாகக் கொண்டு சாவின் தூதனும் பிசாசை வெல்லுவோமாக. எங்கள் சகலதுன்பதுரிதங்களிலும், சோதனைகளிலும் இந்தநாயகியின் சகாயத்தை இரந்துகேட்போமாக.

சதாசகாயமாதாவே! பாவிகளின் அடைக்கலமே! இப்போதும், விசேஷமாக எங்கள் மரணநேரத்திலும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## படித்த இளைஞருக்கு நன்மதி

நாத்தாண்டியாவைச் சேர்ந்த தம்மலதேனிய விவசாய இளைஞர்சங்க கூட்டம்ஒன்று சென்றதிங்கட்கிழமை நடந்தேறியது. அதற்குச் சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகர் சேர் அல்பேட் பிரிஸ்அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து: இன்றைய முக்கியபிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமே; எனது தொகுதியிலுள்ள படித்த இளைஞர்கள் கமத்தொழிலை மேற்கொள்ள முன்வந்திருப்பதையிட்டு நான்மகிழ்ச்சியடைகிறேன்; உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுபோன்ற முயற்சிகள் பெரிதும் பலன் அளிக்கும்; கமத்தொழிற் துறையில் கடுமையாகஉழைப்பதற்கு நீங்கள்தயாராகவேண்டுமெனக் கூறலாயினர்.

## இலங்கையும் ஜனநாயகமும்

அவிசாவலையைச்சேர்ந்த குரும்பிட்டியாவிலுள்ள சென் தெரேசா பாடசாலைப் பரிசளிப்புவிழா சென்ற 6-ந் திகதி திங்கட்கிழமை நடைபெற்றபோது, அதற்குக் கமத்தொழில்—உணவு மந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் தலைமைவகித்துப்பேசியதுவருமாறு: "இந்தஉலகில் ஜனநாயககொள்கைகளைச் சரிவரப்பின்பற்றும் ஒரேயொருநாடு இலங்கையே. இதற்கு உதாரணமாகச் சேர் ஒலிவர் குணதிலக அவதூறுவழக்கைப் பாருங்கள். சீன, ரூஷியாபோன்ற நாடுகளென்றால் திருமதி தேஜா குணவர்த்தன நீதிஸ்தலத்தில் தனது நியாயத்தை எடுத்துக்கூறி வாதாடியிருக்கவும் முடியாது. விடுதலைபெறவும் முடியாது. ரூஷியஅதிகாரிகளால் கொல்லப்பட்ட பேறியாவைப்போலவே இவரும் நடத்தப்பட்டிருப்பார். நிற்க, ஓர்புத்தபிக்குவும், ஓர்கத்தோலிக்ககுருவும் இந்தப் பொதுமேடையில் ஒன்றாக வீற்றிருப்பதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இன— மத— சாதிபேதத்துக்கு ஜனநாயக அரசியல் அமைப்பில் இடமேயில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பட்ட பாடு

— M..J. M. —

பாடென்று கூறுகில் அற்பமாய்த் தோன்றும். அவஸ்தையென்றல் எள்ளுப்போலாவது என்துன்பம் விளங்கும். எனது உடன்மாணவர்கள் எல்லாரும் நன்றாய்க்கற்று நல்லூழியஞ் செய்கிறார்கள். நானும் கற்றுத்தேறினல் பிறருக்குச் சிறப்பானஊழியம் திறமையாகச் செய்யலாமென எண்ணிவிட்டேன். அதுதான் என்பாடுகளின் தொடக்கம்.

தேவையான புத்தகங்களைத் தேடிக்கொண்டேன். படிக்க நேரம்தேவை. பலவேலைகளுக்கிடையிலே ஓய்வுநேரம் கொஞ்சங் கொஞ்சமாகத் தேடி, வீண காலமபோக்காது விடேன் தொடேன் என்று கறகஆரம்பித்தேன். எனது எசமானரும் பெரியமனதுபண்ணி வேண்டிய சௌகரியங்களைச் செய்தனர். அவருக்கு நான்மிகவும் கடமைப்பட்டவன்.

ஆறுமாதகாலமாகப் புத்தகங்களும் நானும் ஆப்த நணபர்களானேம். பழையநண்பாகளைக் காணபதும், அவர்கள் சொற்கேட்பதும, குணங்கள் உரைப்பதும, அவர்களோடு இணங்கியிருப்பதும வெறுப்பாயின. வாசித்தும், மனனஞ்செய்தும், எழுதியும், அழித்தும, கேள்விகளுக்கு மறுமொழி கொடுத்தும் படிப்படியாய்ப் பரீட்சைக்கு ஆயத்தஞ்செய்த என்னை அறியாமலே பரீட்சைநாள் அண்மிவிட்டது.

எனக்குச் சிலஉதவிகள் புரிவதற்கு எனதுநணபர் அமீர் முன்வந்தார். அவர் ஆசிரியத்தொழிலில் வெகுநிபுணர். துடிக்கத்துடிக்க வேலைகொள்ளுவித்து, என்னைப்போன்ற மாட்டுமூளையுள்ளவர்களுக்கு அறிவுபுகத்துவதில் ஆழ்ந்த அனுபவசாலி; நுட்பமான கருத்துகளையெல்லாம் நூதனமாய்விளக்குவார். விளக்குவதற்கு அவா எடுத்தாளும் உவமானங்களெல்லாம அவரைப்போன்று தனிச்சிறப்புள்ளவை. அவைகளைக் கேட்டுவிட்டுப் பொருளை விளங்காமலிருப்பது முடியாதகாரியம். பொருளைமறந்தாலும் விளக்கத்தை இலகுவாக மறந்துவிடமுடியாது.

பரீட்சைகாலம் வந்தது. முதற் கேள்விகளுக்கு விடையெழுதிவிட்டு வெளியில்வந்தேன். மற்ற மாணவர்களுடன் எனதுவிடைகளில் ஒன்று இரணடை ஒப்பிட்டுப்பார்த்தபொழுது என்முகத்தில் அசடுவழியத் தொடங்கிற்று. இலகுவான விடைகளைக் கடுமையாய்நினைத்துக் கேள்வியுடன் சம்பந்தப்படாதசிலவற்றையும் எழுதிக் கொட்டிவிட்டேன்.

தமிழ்ப்பாடம் வந்தது. ஏதோ தடல்புடலாய் எழுதலாமென எண்ணிச்சென்ற எனக்குக் கேள்விப்பத்திரத்தைக் கண்டதும் மூளைவாண்டுவிட்டது. இலக்கியக்கடலை ஒருவாறு கடந்துவிட்டு இலக்கணக்கடலுட் புகுந்தேன். மூர்தியது உள்நாட்டுக்கடலைப் போலஆழமாயிருந்தாலும், அமைதியாயிருந்தது. கழுத்தளவுதண்ணீர்தான். பிந்தியது அலைமோதி யடித்துக்கொண்டிருந்தது. அத்தோடு புசலுங்கூட. தலைக்குமிஞ்சிய ஆழம். ஆகுபெயர், இடைச்சொற்கள்என்று முந்தியஇரவுதான் ஞாபகப்படுத்தினர் ஆசிரியர் அமீர். தமிழ்ப்பரீட்சை யன்றுகாலையும் நினைவூட்டியிருந்தார். முதற்கேள்வியை வாசித்ததும் தலைசுழன்றது. அணுக்குண்டு போட்டிருந்தாலும் நிரம்ப இலேசாயிருந்திருக்கும். போயும்போயும் புணரியலில் போட்டானே கேள்வி அந்தக்கொடும்பாவி. அணுக்குண்டு, கிருமிக்குண்டு, சலவாயுக்குண்டு என்றெல்லாம் சொல்லுகிறார்களே. அதெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து அந்தக்தமிழ்ப் புறுபெசருடைய தலையிலே போட்டாலென்ன என்றுகூட மனதிற்திட்டினேன். போட்டாலும் என்மனம் திருப்தியடைந்திராது.

பரீட்சை முடிந்து வெளியே வந்தேன். எல்லாருடைய முகமும் சூரியனைக்கண்ட தாமரைபோல. என் முகமோ யமனைக் கண்டவன்போல. மனஞ்சோர்ந்தேன். மற்றவர்கள் சொல்வதைக்கேட்ட எனக்கு அரைப் பிராணன் போய்விட்டது. தமிழிலேயும் "குண்டடி"க்கிறவர்கள் உண்டு என்று ஐயாத்துரை சொல்லக் கேட்டு உயிரற்ற பிணமானேன்.

பரீட்சை முடிந்தபிறகுதான் வேதனை அதிகரித்தது. நடந்தவைகளையெல்லாம் மனதிற் புரட்டிப்புரட்டி என்உயிரை வாட்டிக் கொண்டேன். அந்தப்போசிரியரையும், அவருடைய கேள்வியையும் நினைக்கும்பொழுது இப்பொழுதும் ஆத்திரம் வராநிற்கின்றது. பத்திராதிபர்ஐயாகூட என்னைக்கண்டு சேமம்விசாரித்து நம்பிக்கை யூட்டுவார்.

இப்படி மாதங்கள் நான்கு சென்றன. இல்லை. பறந்துவிட்டன. பரீட்சைமறுமொழி வருங்காலங் கிட்டியது. நன்றாய்ப் படித்தேனே; இரவில் கண்விழித்ததால் கண்சிவக்கப் படித்தேனே; சித்தி கிடையாமற் போகுமா? என்று மனஞ் சொல்லும். மறுகணம் எழுதிய மறுமொழிகள் திருப்தியற்றவை யென்றெண்ணித் தோல்விவந்தால் ஆச்சரியப்பட இடமிராது என்று மனஞ்சொல்லும். தினத்தாள்கள் வந்தவுடன் ஆவலாய்ப் புரட்டி பரீட்சைச்செய்தி உண்டோவென்று பார்ப்பேன். மறுநேரம் எனது பெயரில்லாவிடில் தலை கிறுகிறுக்குமே யென்று எண்ணிப் பார்க்காமல் விடுவேன். நான் சீவித்துவருவது கிராமப் புறம். தந்திவசதியற்ற இடம். ஆகையால தினத்தாளுக்குச் சந்தாதாராவதற்குப் பணம்அனுப்ப வேணடுமென்று எண்ணம்வரும். மறுநேரம் "குண்டடித்தால்" புளித்தமாங்காயும் தின்று இளித்தவாய்ப்பட்டமுங் கேட்டதாய் முடியுமே என்று நினைத்து வாளாவிருந்துவிடுவேன். பார்க்க நேரமில்லை யென்று கழித்ததாள்களைப் பலமுறை புரட்டினேன.

ஓரிரவு நித்திரைக்குச் செல்ல ஆயத்தமாகும் வேளை வாசலடியில் கார் ஒன்று வந்து நின்றது. நணபரொருவருடைய குரல்கேட்டது. சுபசெய்தி கொண்டு வந்திருப்பாரென்று ஆவலுடன் அவரை வரவேற்றேன். எல்லாவற்றையும்பற்றிக் கதைத்தவர் இந்தக் கதையைத் தொடக்க மறுத்தார். ஆவலை அடக்கமுடியாமல் பரீட்சைச் செய்தி என்னவென்று கேட்க வாயெடுத்தேன். அதற்குமுன் "நாளைக்கு அடுத்த கிராமத்தில அலுவல்; விடிந்ததும் வாரும்" என்றார். வெட்கிப் போனேன். இனிமேல் ஒருவரிடமும் விசாரிப்பதில்லையென்று முடிவுகட்டிவிட்டேன். இன்னொரு இரவு இருல் சாப்பிட்டுவிட்டுப் படுத்தேன். ஓர் பயங்கர கனவு. அந்தப் பேராசிரியர் தலையில் இருகொம்புகளுடன் என்முன் நின்றார். யான் எழுதிய விடைக் கடுதாசியையும் வைத்திருந்தார். எழுதத் தெரியாவிட்டால் சும்மா இராமல் பொய்யும்புளுகும் எழுதி "முட்டாள் பட்டங் கட்டிக்கொள்ளவாவேணும்?" "நோட்" என்று பென்சிலால் கீறிவிட்டு, "நீங்கள் இரண்டுபேரும் தடிமாடுகள்" என்று கர்ச்சித்தார். துடித்துப்பதைத்து எழுந்தேன். தலையில் இடிவிழுந்ததுபோல இருந்தது. அன்று இரவுமுழுவதும் தூக்கமே வரவில்லை.

இவ்வாறுகப் பலநாட்கள் பறந்தபின் அந்த நாளும் விடிந்தது. காலைக்கடமைகளை முடித்துவிட்டுக் கல்யாணி இராகமொன்றை வாய்க்குள் படித்துக் கொண்டி[illegible]

ஐயா தந்தி" என்று கேட்டது. பிரித்துப் பார்த்தேன். இதென்ன கனவா நனவா? "சித்தி" என்றிருந்தது. இருதயம் துடிதுடித்தது. இல்லை நான் மூர்ச்சையடையவில்லை அன்றிரவு கண்ட பேராசிரியரை ஒருக்கால் பார்க்க ஆசை பிறந்தது.

இதென்ன கற்பனையென்று நீங்கள் யோசிக்கலாம். ஆனல், நான் சொல்வதைக்கேளுங்கள். புணரியலைப்பற்றிக் கேள்விவந்ததும் மெய். தமிழ்விடையைப்பற்றி நான் பயந்ததும் மெய். [illegible] சலுகைபுரிந்ததும் மெய்.

# என்ன நிகழும்?

அறுசீர் விருத்தம்

(1) வான்தொடக் குவித்த போதும்
வைப்பதற் கடங்கா மிக்க
கோன்திரு வரத்தால் என்றுங்
குறைவற நிறைவு கொண்டாள்
தேன்தருப் புவனம் நீத்துச்
சென்றவா றின்று மீண்டு
தான்வரக் கொண்டால் இந்தத்
தரணியில் நிகழ்வ தென்ன?

(2) கால்படி மதியைக் கண்டே
காவிகள் மலரத் தூய
மேல்படி யிரவி கண்டே
மெல்லிதட் கஞ்சம் பூப்பச்
சேல்படி வாவி மேலாய்த்
திரியுவண் டினங்க ளிந்தக்
கால்எது? இரவோ இன்றேல்
காலையோ என்று நோக்கும்!

(3) ஆறிரு மீன்கள் சேர்ந்து
அழகுசெய் மவுலி கண்டு
ஏறிவான் இரவிற் சுற்றும்
இருஞ்சிறைப் புட்க ளெல்லாம்
மாறுத லாக மண்ணை
வானமென் றெண்ணித் தாழ்ந்து
மீறிய மகிழ்வைத் தங்கள்
மென்குர லிசையிற் காட்டும்!

(4) திவ்விய தாயின் பாதத்
திருமல ரிரண்டின் கீழே
வெவ்விடப் பறவை நாகம்
விழிவெளி பிதுங்கக் கண்டு
அவ்விடக் குருகுக் குஞ்சு
அனைத்துமா னந்தங் கொண்டு
ஔவிய முடையோர் துன்பம்
அடைவரென் றோசை செய்யும்!

(5) ஐந்துபத் தொருமூன் றுள்ள
அருள்மணி ஆரங் கண்டு
பந்தனக் கயிறென் றுன்னிப்
பசாசுகள் பயமே கொள்ளும்
வந்தனை புரியும் வானேன்
வாசனை வடமென் றேத்தும்
மந்திர மாலை யென்றே
மண்ணெலாம் மகிழ்ந்து கேட்கும்!

— "யுவன்" கரம்பொன்.

## ருஷியாவும் அமெரிக்காவும்

"யுத்தம் மூண்டால் ருஷியாவை யாரும் வெல்லமுடியாது; அவ்வாறே அமெரிக்காவையும் யாரும் வெல்லமுடியாது" என்று அமெரிக்க ஜனநாயக கட்சியின் முன்னள் ஜனதிபதியான திரு. ட்றூமன் அவர்கள் கூறுகின்றார். மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது: ருஷியாவில் என்றேஒருநாள் சுதந்திர ஆட்சி நடைபெற்றே தீரும்; அப்போது பிரான்ஸ், பிரித்தானியுடன் அமெரிக்க ஐக்கியதேசம் உறவாடுவது போல அதனுடனும்உறவாடிப் பரஸ்பரம் வர்த்தகஞ்செய்யலாம்; அதுவரை இருநாடுகளும் "உடனிருந்து வாழ" முடியாது; ருஷியாவில் நல்லமக்களும் இருக்கிறார்கள்; பிரித்தானிய, பிரானசிய மக்களுடன் இப்பொழுது அமெரிக்கர் கலந்துஉறவாடுவதுபோல ருஷியாவின் நல்லமக்களுடனும் உறவாடுங்காலம் எப்பொழுதாவது வாராமற்போகாது."

சந்தாதாரருக்கு
## ஓர்வேண்டுகோள்

"சத்தியவேதபாதுகாவலன்" சந்தாதாரருக்கு 1954-ம்ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னுமேகவனியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப்பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம். 1955-ம்ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த பங்குனிமாதம் 31-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரும் கேட்கப்படுகின்றார்கள். பணம் அனுப்பும்போது சந்தா நம்பரையும் குறித்து அனுப்புக.

* * *

## கையொப்ப விகிதம்

| | | |
|---|---|---|
| நகரசபைஎல்லைக்குள் | வருஷம் | —5-00 |
| இலங்கை—இந்தியா | ,, | —5-50 |
| மலாயா | ,, | —6-00 |

[பணம் அனுப்புகிறவர்கள் ரூ. 3-00, ரூ. 2-50-க்கு இருபோஸ்ரல்ஒடர் எடுத்து அனுப்பினல் செலவு குறைவாயிருக்கும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்மாவின் தியாகம்

பத்மா ஏழைக்குடும்பத்தில் உதித்த ஒரு பெண். அவளுக்குத் தந்தை இல்லை. தாய் பெயர் தங்கம். தங்கமும், பத்மாவும் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்துவந்தனர். தங்கம் அன்றாடன்று கூலிப்பிழைப்புக்குச் சென்று, அதில் கிடைக்கும் சொற்ப பணத்தைக் கொண்டு இருவரும் சீவியம் நடத்தி வந்தார்கள்.

தங்கமான குணம் உள்ளவள் தங்கம். பத்தி மிகுந்த உத்தமி. அவள் மகளோ "தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை" என்பதற்கு ஒப்ப, நற்குணம் உள்ளவள். தேவ பக்தியில் குன்றாதவள். சின்னயேசுவில் மிகுந்த அன்புள்ளவள். ஏழை மனம் படைத்தவள்.

தங்கம் பலமுறைகளில் தனது அருமைமகளுக்குப் பட்சணம் வாங்கப் பணம் கொடுப்பது வழக்கம். அன்னை கொடுக்கும் பணத்தை அவளும் பல வகைப்பட்ட பண்டங்கள் வாங்கி உண்பதில் செலவிடுவாள். ஆனால், அவளுடைய இந்தப் பழக்கம் நெடுநாள் நீடிக்க வில்லை. வீதிகளிலே தேடுவார் இல்லாது கிடக்கும் ஏழைக்குழந்தைகளைப் பற்றி ஓர் நாள் தனது பங்குச் சுவாமியார் உருக்கமாகச் சொல்லக் கேட்டதுமுதல் அந்த வழக்கத்தையே அவள் முற்றாக விட்டுவிட்டாள். அக் கன்னியாஸ்திரீமார் அப்பாலர்களைக் கண்டெடுத்து வளர்க்க வழியின்றிக் கஷ்டப்படுவதையும், உதாரகுணமுள்ள நல்லவர்களின் தருமத்தை எதிர்பார்த்துத் தவிப்பதையும் நினைக்கும்போது பத்மா சிலவேளை அழுதும் விடுவாள். கண்ணே! ஏன் அழுகிறாய்? என்று தாய் கேட்டால், அம்மா! தாய்மார்இன்றித் தவியாய்த் தவிக்கும் பாலர்களையும், அவர்களை வளர்க்க வழியின்றி வாடும் கன்னியாஸ்திரீமாரையும் நினைக்கும்போது என் கண்கள் கலங்கி என்னை அறியாமலே கண்ணீர் வருகின்றதே என்று சொல்வாள்.

அப்போது தாய், "கண்ணே! அழாதே அம்மா; உனது நல்ல மனதைச் சின்னயேசு அறிவார்; நல்லமனதே அவருக்கு மிகவும் பிரியம்; நாங்கள் ஏழைகள்; ஒன்றுக்கும் வகையற்றவர்கள்; ஆனால், சின்னயேசுவின் சின்னப்பாலர்களை அந்தப் பச்சைக் குழந்தைகளைத் தாபரிக்க உதவி செய்வதில் எல்லோரும் நல்மனம் காட்டும்படி அவரை மன்றாடி வருவோம்" என்று சொன்னாள். ஆனால், தாய் கூறியது பத்மாவுக்குத் திருப்திதரவில்லை. தனக்கு அம்மா கொடுக்கும் பணத்தைச் சின்ன யேசுவுக்குச் சேர்த்துக் கொடுக்கத் தொடங்கினாள்.

அன்று திருப்பாலர்சபை ஞாயிறு. பத்மாவின் பங்குக் குரவர் கைவிடப்பட்ட பாலர்களுக்காக வீடுகள்தோறும் பணஞ் சேர்க்கச் சென்றார். அவர் வீடுவீடாய்ப் பணம் தண்டிக் கொண்டு வந்தார். ஆனால், பத்மாவின் வீட்டைக் கண்டதும், அவர்களின் நிலைமையை அறிந்தவராகவே அவர்களின் வீட்டைத் தாண்ட ஓரடி எடுத்து வைத்தார். அப்போது ஒரு குரல். திரும்பிப் பார்த்தார். சுவாமி! வாருங்கள்; ஏழைகளான நாங்கள் தரும் அற்ப சொற்ப பணத்தையும் சின்ன யேசுவின் பேரால் ஏற்று அனுப்புங்கள் என்று மிகவும் பணிவாகக் கேட்டாள். சுவாமியார் மிகுந்த சந்தோஷத்துடன் "மகளே! உனது உதார குணத்துக்காகச் சின்னயேசு உங்களை ஆசீர்வதிப்பார்" என்றுகூறிப் பத்மா கொடுத்த பணத்தை மிகவும் சந்தோஷத்துடன் வாங்கிச்சென்றார்.

இதனைக் கவனித்த அவளுடைய தாய் தனது மகள் ஒறுத்தல் செய்துவந்ததைக் கவனித்து உவகை பூத்தாள்.

—ஆசிரிய மாணவி

# பாலர் பக்கம்



அருமையான பிள்ளைகளே!

இந்தமாதம் 8-ந் திகதியுடன் மரியாயின் பரிசுத்த வருடம் முடிவடைந்தது. இந்த ஆண்டில் நீங்கள் மரியாயின் திருசேத்திரங்களுக்கு யாத்திரை செய்திருக்கிறீர்கள். எங்கள் ஆன்ம சீவியத்தில் மரியாயின் பங்கு என்ன என்று அறிந்திருக்கிறீர்கள். நாம் மரியாயில் பக்திகொள்ள வேண்டிய அவசியத்தையும் விளங்கியிருக்கிறீர்கள்.

மரியாய் பரலோக, பூலோக இராக்கினி என்று பரிசுத்த பாப்பரசர் அவவுடைய திருப்படத்திற்கு முடிசூட்டியது உங்களுக்கு ஞாபக மிருக்கும். இவைகளால் மரியாய்பக்தி வளம்பெற வேண்டும்.

ஆகையால், இப்பரிசுத்தமான மரியாயின் வருடமுடிவில் தேவதாயை — எமது மரிய அன்னையை முழுமனதோடும், முழு இருதயத்தோடும் நேசித்து வருவோம் என்று மனதில் உறுதியான பிரதிக்கினை செய்து கொள்ளுங்கள்.

இதை நடைமுறையில் அனுசரிப்பது எப்படி? முதலாவதாக, தேவதாயாரின் புண்ணிய மாதிரிகைகளைப் பின்பற்றித் தேவனை எல்லாத்துக்கும் மேலாக நேசிக்க வேண்டும். நீங்கள் பாடசாலையில்மரியாயின் மைந்தர்சபை, அல்லது மரியாயின்சேனையிற் சேர்ந்திருக்கிறீர்களா?

இரண்டாவதாக, பிரியதத்த மந்திரம், திரிகாலைச் செபம், "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற செபம், அடைக்கலச் செபம் சொல்லி வருகிறீர்களா? எப்பொழுதும் செபமாலையை உங்களுடன் வைத்திருப்பது முடியாத காரியமா?

மூன்றாவதாக, எங்கள் ஆண்டவளும், இராக்கினியுமான தேவதாயார் பேரால் ஒவ்வொரு நாளும் ஒருசிறு ஒறுத்தல், பரித்தியாக முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் தேவதாயாருக்குப் பிரமாணிக்கங் காண்பித்தால் அவவும் உங்களுக்குப் பிரமாணிக்கமாய் இருந்துவருவா.

உங்களை அன்புடன் ஆசீர்வதிக்கிறோம்.

H. லெக்குத்தூர், O. M. I.
மேற்றிராசன பரிபாலனர்

யாழ்ப்பாணம்,
9-12-54.

### என்ன தபம்!

தபம், ஒறுத்தல், பரித்தியாகம் என்றால் உங்களுக்குப் பயம் வரும். ஏதோ மருந்து குடிக்கிறது போல ஏ...என்று ஏங்கி எங்களால் முடியாது என்று சொல்லுவீர்கள்.

அர்ச். ஜோண் பொஸ்கோவை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவர் ஒறுத்தல் செய்த விதத்தைக் கேளுங்கள்.

ஜோண் பொஸ்கோ தமதுஆடுகளைப் பசும்புற்றரையில் மேயவிட்டு, நீலவானக் கூரையின் கீழிருந்து சாப்பிடுவார். அடுத்த சமத்தில் இருக்கும் அவருடைய நண்பனும் போசனத்துக்காக அவ்விடம் வருவான் அவனுடைய பையில் எரிந்து காய்ந்த அப்பம் இருக்கும். ஜோனுடைய அப்பம் அதைவிட நன்றாய்இராவிட்டாலும் வெள்ளையாயும், சூடாயும் இருக்கும்.

ஜோண் வெகு எளிதாகத் தமது நல்ல அப்பத்தை நண்பனுக்குக் கொடுத்துவிட்டு, அவனுடைய கருகிய அப்பத்தை வாங்கிச் [illegible] அப்பம் கூடின [illegible] சொல்வார். தமக்கு அதுதான் பிடிக்குமாம். அப்படியே மூன்று வருடங்களாக இளவேனிற்காலத்தில் ஆடுகளை மேய்க்கும் பொழுது செய்துவந்தார்.

அநேகவருடங்கள் சென்றபின் தான் ஜோண் பொஸ்கோ கருகிய அப்பஞ் சாப்பிட்டு அனுசரித்தஒறுத்தல் அந்த நண்பனுக்கு விளங்கினது.

—ஜே. எம்.

### குப்பையில் பொக்ஷம்

பிறருக்குஉதவிசெய்ய என்னென்ன வழிகளை உபயோகிக்கிறார்கள் மனிதர். பரீஸ் பட்டணத்திலே ஒரு குருவானவர் குப்பைக் குவியலில் பொக்ஷக் குவியல் கண்டிருக்கிறார். பட்டணத்துக்கு வெளியே குப்பைமேட்டில் அவர்வசிக்கிறார். இல்லிடமற்ற ஏழைகளும், பழைய மறியற்காரரும் அவருடைய உதவியாளர். இவர்கள் நாள் முழுதும் வேலைசெய்து — அதாவது குப்பைகளைக் கிளறி இரும்புத் துண்டுகள், தகரங்கள் முதலிய விற்பனைக்குரிய பொருட்களைச் சேகரிக்கிறார்கள்.

இப்படிச் சேகரித்தவைகளை விற்று அந்த ஏழைகள் உணவுதேடிக் கொள்ளுகிறார்கள். அப்படிச் சீவிக்கிறவர்கள் 160 பேர்வழிகள். இவர்களுடைய உழைப்பு இல்லிடம் அற்றவர்களுக்கு உறைவிடம் தேட உதவுகிறது.

பழைய இரும்பு முதலிய பொருட்களை வாங்குகிற சங்கத்தார் இவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கிறார்கள்.

இந்தக் குருவானவர் பழைய றெயின் பெட்டிகள், குதிரைகள் ஏற்றிச் செல்ல உபயோகிக்கப்பட்ட சில்லுகள் இல்லாத வாகனங்கள் ஆதியனவற்றை வாங்கி, வீடுகளாய் மாற்றி உறைவிடம் அற்ற குடும்பங்களுக்கு வழங்குகிறார்.

பாருங்கள் பழைய பொருட்களுக்கும் விலை உண்டு. உங்கள் பெற்றோரைக் காசு கேட்டுத் தொந்தரவு செய்யாமல் வீட்டில் கிடக்கும் பழையபொருட்களைச் சேகரித்து விற்று உங்களுக்கு அறிமுகமான ஒரு ஏழைச்சிறுவனுக்கு உதவலாம் அல்லவா?

— எம். ஜேயம்

## ஆகமனத்தின் 3-ம் ஞாயிறு

### நிருபம், பிலிப்பியர் 4 : 4–7

ஆகமன காலம் கவலையுடன் எதிர்நோக்குங்காலம். பூர்வீக யூதர் உலக இரட்சகராகிய மெசியாவின் வரவை வெகுவாய் ஆசித்து, தலையில் சாம்பலைப் பூசி, சாக்கு உடுத்தி, கவலை நிறைந்து போய்க் கண்ணீர் விட்டுப் பெருமூச் செறிந்து, "வானத்தைப் பிளந்து கொண்டு வாரீரோ" என்று ஓலமிட்டுச் செபித்தார்கள். அதை நினைவுறுத்துவது ஆகமன காலம். ஆகையாற்றான், தபத்தைக் குறிக்கும் ஊதா நிறத்தை இந்நாட்களில் திருச்சபை உபயோகிக்கிறது.

கவலையும், பெருமூச்சும் நிறைந்திருந்தாலும் நம்பிக்கையும் உண்டு. அளவிற்கு மிஞ்சிய கவலையை ஒழித்து, "ஆனந்தங் கொள்ளுங்கள்...... கர்த்தரிலே தான்"; அவர் காரணமாகத்தான்; "திரும்பவும் சொல்லுகிறேன், சந்தோஷப் படுங்கள்" என்கிறார், சம்பாவிலு. "உங்களுடைய மட்டுத் தன்மை, மிதம் எல்லா மனிதருக்கும் தெரியட்டும்." (நடுவில் நிற்பதே சிறப்பு என்றார் அஸ்தோத்திலிஸ்.) எல்லாக் காரியங்களும் அளவுடனிருக்க வேண்டும். அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு அல்லவா?

இந்தச் சந்தோஷத்திற்குக் காரணம் என்ன? "கர்த்தர் அண்மையில் இருக்கிறார்." கர்த்தர் இவ்வுலகத்துக்கு வந்துவிட்டார். ஆகையால், அருகிலிருக்கிறார். யூதரைப்போல மறு லோகத்தை நோக்க வேண்டிய அவசியமில்லை. எம்மனதில் எழுந்து எம்மை ஆட்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கவலையாக வேண்டும்.

இந்தக் கவலையும் மிதமிஞ்சியதாகக் கூடாது. எங்களுடைய "செபங்களும், வேண்டுதல்களும் நன்றியுடன் கலந்த மன்றாட்டாக" வேண்டும். ஒருவரிடத்தில் நாம் பெற்றுக்கொண்ட நன்மையையிட்டு நன்றியுள்ளவர்களாய் இருப்பது மேலும் நன்மைபெற வழியன்றோ!

எதிர்நோக்குவதில் மட்டற்ற கவலையின்றியும், வேண்டுதலில் மிதமிஞ்சிய ஆவல் கொள்ளாமலும், "நடுவில்" நின்றால் என்னவாகும்? புலன்களுக்குப் புரியாத — புலன்களால் கணிக்கமுடியாத — புலன்களுக்கு அப்பாற்பட்ட தேவனின் அமைதி, சாந்தி "உங்கள் புத்தியையும், உணர்ச்சிகளையும் ...... பாதுகாக்கும்."

இந்த அமைதி அல்லது சமாதானமும், பாதுகாப்பும் எங்கள் ஆண்டவரான "யேசுக் கிறீஸ்துவையே மையமாக" க்கொள்ள வேண்டும்.

—சருவேசுரனுக்குத் தோத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரணம் என்ன?

'ஜெயம்'

I

மகனே! உன்முகம் அழகோடு
மலர்போல் ஒளிர்வதன் காரணமென்?
அயரா தென்சிறு கடமைகளை
அல்லும் பகலும் செய்வதுதான்.

II

மகனே! நீமிகு விரைவாக
அலைபோற் சென்றிடும் காரணமென்?
சுகமாய் வேலைகள் செய்திடவே
சுறுசுறுப் பவசியம் அதனாலே.

III

மகனே! நீவெகு திடமாக
மலைமேல் நிற்பதன் காரணமென்?
அசையா மனம்எச் செயல்களிலும்
அனுகூ லந்தரு வதினாலே.

IV

மகனே! நீபெரு மகிழ்வான
மனமோ டுலவும் காரணமென்?
அகமும் புறமும் புனிதமுடன்
அன்பொடு வாழும் முறையாலே.

## சிறுவரின் நத்தால் செபம்

பாவமாசின்றிச் சென்மித்த மரியாயே! நேர்மையான அன்பின் அன்னையே! உமது தேவசுதனை எங்கள் முழுமனதோடும் முழு இருதயத்துடனும் நாங்கள் நேசிக்க உதவி செய்யும். நாங்கள் நன்மையிலும், புண்ணியத்திலும் உயர்ச்சி யடைவதற்கு எங்கள் பள்ளிப் பருவத்தை உபயோகிக்கச் செய்யும். எங்களுக்குப் பாவச்சோதனை வரும் பொழுது போர்ராட்டத்தில் உறுதியாயிருக்க உதவிபுரியும். சாத்தானின் வலிமையை இறுதிவரையும் எதிர்த்து உமது குதிக்காலால் அவனை நசுக்கக் கடவோம்.

எங்கள் முதற் கடமையாகிய கல்வியில் பிரமாணிக்கமாய் இருக்கச்செய்யும். கற்பைக் களங்கம் இல்லாமல் கண்மணிபோல் காத்துவர உதவி புரிந்தருளும். எங்கள் எண்ணம், சொல், செயல் யாவும் உமது மகிமைக் கேதமாயிருக்கச் செய்தருளும்.

மாசற்ற அன்னையே! அமலோற்பவ மரியாயே! சருவேசுரனுக்குரிய உண்மையான சந்தோஷங்களை நாங்கள் அனுபவித்து, இந்த நத்தால் கொண்டாட்டத்தை உமது குமாரன் கிறீஸ்துநாதருடன்சேர்ந்த சந்தோஷமாக அனுபவிக்க உதவிபுரிவீராக, ஆமென்.

## சரியான விடைகள்

வசனப்பகுதி:

1. அவள் பெயர்: அர்ச். சிசீலியா.
   திருநாள்: கார்த்திகை 22-ந் திகதி.
   பாதுகாவலாளி: சங்கீதகாரர்களுக்கு.
2. (1) பொறுமை, (2) வானவில், (3) விசித்திரம்.
   [இவைபோன்ற பொருத்தமான சொற்கள் வேறும் வரும்]
3. (1) விவாகம். (2) அடுப்பைவிட்டு இறக்குவார்கள். (3) பிரான்சீஸ் கன்சபை.—அர்ச். பிரான்சீஸ்கு. (4) அர்ச். நீக்கிலஸ்.

---

கணிதப்பகுதி

1. புறப்பட்ட யானைகள்: 135.
2.

$$\begin{array}{r} 9+8+7+6+5+4+3+2+2=45 \\ 1+2+3+4+5+6+7+8+9=45 \\ \hline 8+6+4+1+9+7+5+3+2=45 \end{array}$$

இருபகுதிகளுக்கும் சரியானவிடை அனுப்பியவர்கள்:

பெர்னதேத் சவிரிமுத்து
மாரிசன் கூடல்,
இளவாலை.

ச. சிசிலியம்மா
றோ. க. பாடசாலை
முதலியாகுளம்.

வசனப்பகுதிக்கு மாத்திரம் சரியான விடை அனுப்பியவர்கள்:

அ. தி. சோதிமலர்,
றோ. க. பாடசாலை,
உயிலங்குளம்.

பி. பார்வோன்
றோ. க. பாடசாலை,
உயிலங்குளம்.

ஆ. சேவியர் குலாஸ்
அர்ச். ஆனாள் ஆண்பாடசாலை,
வங்காலை.

கணிதப்பகுதிக்கு மாத்திரம் சரியானவிடை அனுப்பியவர்கள்:

லூட்ஸ் பேர்னாட்
மாரிசன் கூடல்,
இளவாலை.

எஸ். கயித்தாம்பிள்ளை
அர்ச். கயித்தார் பாடசாலை,
மாரிசன் கூடல், இளவாலை.

எஸ். அல்பிறெட்
முருங்கன்.

பாவனை இல்லாத இரும்பு துருப் பிடிக்கும். கட்டுப்பட்ட தண்ணீர் அசுத்தமாகும். அப்படியே முயற்சியின்மை புத்தியின் சத்தை உறிஞ்சிவிடும்.

—லேயோனூர்டோ டா விஞ்சி.

## விடை கூறுங்கள்

வசனப்பகுதி

1. இங்கிலாந்து சென்ற ஓர் நாட்டுப் பெண்மணி அங்கு தலைமறைவாக நிற்கின்றாள். அவள் எந்தப் பெண்மணி?
2. நெல்லு எங்களுக்குக் கிடைக்கும் இடம் யாது?
3. ஆசியாவின் நடுநாயகமாக விளங்குவது எது?
4. அயோக்கியன் யோக்கியனாக நடக்கவிரும்பின் முதல் எதை விலக்க வேண்டும்?
5. வெள்ளைப் பசுவை விடக் கறுத்தப்பசு பெருமையில் உரியதாம். ஏன் தெரியுமா?
6. ஆறு எதற்குப் பின்னால் ஓடி வருகிறது?
7. யாழ்ப்பாணத்தில் எங்கே நெல் விளைவிக்கப்படுகிறது?

ஆ. சிசிலியா
தி. கு. க. மடம், ஆங்கில பாடசாலை,
யாழ்ப்பாணம்.

**கணிதப்பகுதி:**

எனக்கு மூன்று அக்காமார் உண்டு. நான் அவர்கள் வீட்டுக்குப் போகும் போது கொஞ்சம்காசு கொண்டுபோகிறேன். அதேபோல் என் அக்காமார் ஒவ்வொருவரும் தருவார்கள். அவர்களுக்கு 5 ரூபாவுக்கு ஒவ்வோர் சீலை எடுக்க வேண்டும்.

**உதாரணம்:—** நான் 5 ரூபா கொண்டு போனால் எனக்கு முதலாவது அக்கா அதேபோல் 5 ரூபா தருவா. அப்போ என்னிடம் 10 ரூபா இருக்கும். இதில் 5 ரூபா சீலை எடுத்துக் கொடுக்க வேண்டும். போனால் மீதி 5 ரூபா. இப்படியே மூன்று அக்காமாருக்கும் கொடுத்து விட்டு நான் கடைசியில ஒரு சதமும் இல்லாமல் போகவேண்டும்.

இப்படி மூன்று அக்காமாருக்கும் கொடுக்க நான் எவ்வளவுகாசு கொண்டு போயிருப்பேன்?

அ. அல்போன்ஸ் சிராயிவா
அர்ச். சவேரியார் கல்லூரி,
மன்னார்.

## கவனிக்கவேண்டும்

1. ஆகாரத்தை நன்றாய் மென்று சாப்பிடுவதில் அசட்டையாய்இராதே.

2. இராச் சாப்பாட்டிலே அதிக போசனம் அருந்தாதே. அது படுக்கைக்குப்போகும் நேரமாகவே சீக்கிரமாகச் சாப்பிடாதே.

3. வேளைதப்பிய நேரங்களில், அல்லது நினைத்தபோதெல்லாஞ் சாப்பிடாதே. உணவு நேரங்களுக்கிடையில் குறைந்தது ஐந்துமணி நேரம் இருக்கும்படிபார்.

4. ஒருகடலையைச் சாப்பிட்டாலும் அது சீரணிக்கச் சீரண உறுப்புகள் ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவேண்டும். சீரண உறுப்புகளுக்கு ஓய்வு ஒழிவின்றி வேலை கொடுத்தால் அவைகள் சீக்கிரம் பழுதடைய ஏதுவாகும்.

5. காலை, மாலை இருவேளைகளிலும் உண்டு முடிந்தபின் பற்களைத் துலக்கிச் சுத்தஞ்செய்ய மறவாதே.

6. வீட்டிற்குள் அதிகமாய் அடைபட்டுக்கொண்டேயிராமல் கூடியமட்டும் திறந்தஆகாயவெளியில் நடமாடு.

7. சுத்தமே சுகந்தரு மாதலால் உன் ஆத்துமத்தையும், சரீரத்தையும், உடைகளையும், நீ புழங்கும் இடங்களையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்.

8. குளிக்கும்போது 'சோப்' தேய்த்துக் குளித்தால், அதன் நுரை உரோமக் கண்களை அடைக்காதவாறு நன்றாய்த் தேகத்தைத் தேய்த்துக் குளிக்கத் தவறாதே.

9. காய்ச்சிய நீரைப் பருகத் தவறாதே. "நீர்கருக்கி, மோர்பெருக்கி, நெய்யுருக்கி உண்பவர்தம் பேருரைக்கிற் போமே பிணி" என்றார் ஓர் அறிஞர்.

10. தேகாப்பியாசத்தின் பொருட்டு, விளையாட்டுகளில் கலந்து கொள்ள மறவாதே.

11. ஆயாசம், கோபம், துக்கம், எரிச்சல் இவைகளினால் மனம்பொங்க இடமளியாதே. சுகமே பெரிய செல்வமென்று நினை. அது இல்லாவிடின் உன்விருப்பம், நம்பிக்கை, பிரயத்தனங்கள் யாவும் வியர்த்தமாகும்.

12. மனம் சுறுசுறுப்படையும் பொருட்டு இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கத் தவறாதே. இயற்கை இன்பந்தான் இறைவன் நமக்கருளிய செல்வம் என்பதை மறவாதே!

எஸ். எல். சவுந்தரநாயகம்
இலுப்பைக்குளம்.

## சிறுவர் சொற் கோர்வை

| | | | |
|---|---|---|---|
| அழகு | அழகு | என்ன | அழகு |
| முக | அழகு | என்ன | முகம் |
| துறை | முகம் | என்ன | துறை |
| பருத்தித் | துறை | என்ன | பருத்தி |
| நூல் | பருத்தி | என்ன | நூல் |
| வெள்ளை | நூல் | என்ன | வெள்ளை |
| பல்லு | வெள்ளை | என்ன | பல்லு |
| பிள்ளைப் | பல்லு | என்ன | பிள்ளை |
| கிறிஸ்ரிப் | பிள்ளை | என்ன | கிறிஸ்ரி |
| பீற்றர்க் | கிறிஸ்ரி | என்ன | பீற்றர் |

கிறிஸ்ரிப்பீற்றர்

பி கிறிஸ்ரிப் பீற்றர்
சஞ்சூசையப்பர் சாதனைகழகம்,
கொழும்புத்துறை.

---

## —: அறிவுச் சுடர் :—

☼ முதல் ஆகாயப்பிரயாணம் எங்கே, எப்போது, நடைபெற்றது?

பிரான்ஸ் தேசத்தில் வேர்சேலிஸ் நகருக்குச் சமீபமாக 1783-ம்ஆண்டு நடைபெற்றது. இது ஓர் பேப்பர் பலூனிலேயே நடந்தது. அந்தப் பலூனின்கீழ் தொடுக்கப்பட்ட தொட்டில் போன்ற கூண்டிலே முதற்பிரயாணிகளாக ஒரு செம்மறியாடும், ஒரு கோழியும், ஓர் தாராவும் பிரயாணஞ் செய்தன.

☼ சீவபிராணிகளுள் மிகநீண்ட காலம் சீவித்திருப்பன எவை?

ஓர் இனத் திமிங்கலங்களேயாகும். இவைகள் ஆயிரம்வருடம் சீவித்திருப்பதாக நம்பப்படுகிறது.

☼ உலகில் மகாப் பெரிய தாய் அமெரிக்க ஐக்கியதேச பலொமார் மலையின்மீது ஸ்தாபிக்கப்பட்டிருந்து வரும் 200 அங்குல தூரதிருஷ்டியந்திரம் எத்துணை பலம் பொருந்தியது?

18,000 மைல் தூரத்திற்கப்பால் எரிந்துகொண்டிருக்கும் ஓர் மெழுகுவர்த்திச்சுடரைக் கண்டுகொள்ளப் போதிய அத்துணை தூரப்பார்வைப் பலம்பொருந்தியது.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எமக்கு எதிர்பாராத்விதமாய் ஏற்பட்ட நோயினின்று காக்கும்படி பரிசுத்த மாதாவைச் சரணடைந்தேன். மாதாவின் மன்றாட்டினால் எமது துன்பமனைத்தும் பரிதிமுன் பனிபோல் மறைந்தன. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். பரிசுத்த சதாசகாயமாதாவின் மகிமை எங்கும் புகழப்படுவதாக.

மாதா பக்தன்,
சலாபம் W. S. M. Fernando.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைத் திறப்புவிழா

மன்னாரைச்சேர்ந்த உயிலங்குளக் கத்தோலிக்க பாடசாலையிலே நவமாக அமைக்கப்பெற்றுக் கண்ணுக்கினிய அலங்கிர்தகாட்சி அளித்துநிற்கும் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழும் 5-12-54 ஞாயிறுவாரம் பிற்பகல் எமது கட்டளைக்குரவர் வண. எச். மொறேறு சுவாமியவர்கள் தலைமையில் வெகுவிமரிசையாகவும், பரிமளிப்பாகவும் நடந்தேறியது. சிலதினங்களாக விடாதுபெய்து வந்த மழையும் இத்திறப்புவிழாவை முன்னிட்டுப்போலும். பிற்பகல் 4 மணி முதல் இளைப்பாறி ஓய்வெடுத்துக் கொண்டது. மக்கள் திரளாகச் சமுகமளித்திருக்க, நிகழ்ச்சிகள் விமரிசையாக நடைபெற்றமை குறிப்பிடற்பாலது. ஆரம்பத்திலே மாணவர்களின் ஆரம்பவரவேற்புக்கீதம், பேச்சு என்பன சபையாரை மகிழ்ச்சிசெய்தன. பின்னர் "சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகாசிரியர் அவர்கள் "தேம்பாவணி"யிலே மீட்சிப்படலத்தின் ஓர்பகுதியை ஆதாரமாகக்கொண்டு யாவரும் எளிதிலே புரிந்துகொள்ளக்கூடிய சிறந்ததமிழ்நடையில் பெரிதும் இன்பகரமான ஓர் கதாப்பிரசங்கம் செய்தனர். இவ்வித அருட்சிக்குரிய கதாப்பிரசங்கத்தை முன்புதாங்கள் ஓர் காலமும் கேட்கவில்லையென்று பலரும்வியந்து பேசிக்கொண்டார்கள். பின்னர்பறப்பாங்கண்டல் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. எம். டானியல் றேச் அவர்களும், நாவற்குளக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. வி. ஆர். டோமினிக் அவர்களும் நிகழ்த்திய சிறந்த சொற்பொழிவுகளும், புகட்டிய அறிவுரைகளும், மாணவர் மாணவிகளின் ஆடல்பாடல்களும் அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தன. ஈற்றில் தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள் எழுந்து வண. கட்டளைக்குரவர் அவர்கள் அப்பாடசாலை அத்துணை அழகாக நவீனமுறையிலே கட்டிமுடிக்க எடுத்துக்கொண்ட அயராமுயற்சி வெகுவாகப் பாராட்டத்தக்கதென்றும், கிராமியமக்கள் பாடசாலைகளுடன் நெருங்கிக் கலந்துஉடன் முயற்சி செய்துவர வேண்டுமென்றும், பாடசாலை மூலமாகவே கிராமங்கள் முன்னேற்றமடையச் செய்யலாமென்றும், அடுத்தஆண்டுடன் இப்பாடசாலையில் ஜே. எஸ். சி. வகுப்பு நடத்தப்படுமென்றும் பேசிச் சகலருக்கும் கூறிய நன்றிஉரையுடன் விழாமுடிபெய்தியது.

—நிருபர்.

## பெற்றோர்தின விழா

புங்குடுதீவுக் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்றோர்தின விழா சென்ற 5-12-54 பிற்பகல் கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரரான அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியார், மண்டைதீவுக்கட்டளைக் குரவர், புங்குடுதீவுக் கட்டளைக்குரவர், மற்றும் பன்னூற்றுக்கணக்கானமக்கள் கூடிய சமூகத்திலே வடபெரும்பாக வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள்தலைமையில் அதிசிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று.

பாடசாலைத் தலைமைஆசிரியர் எம். கே. கே. அருட்பிரகாசம் பண்டிதர் அவர்கள் தமது அறிக்கையில் பாடசாலையின் முன்னேற்றத்தையும், புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்ட விதத்தையும், மாணவர்மாணவிகள் கல்வியிலும், விளையாட்டிலும், சமயபாடத்திலும் காட்டிவரும் ஊக்கத்தையும் குறிப்பிட்டார். பின்னர் வித்தியாதிகாரிஅவர்கள் மாணவர் மாணவிகட்குப் பரிசில்களை வழங்கியபின் பேசியவிடத்து: ஆசிரியரின் அறிக்கையைக் கேட்டுத் தாம் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும், தாம் மறுமுறைவருவதற்குள் ஆசிரியரவர்கள் இப்பாடசாலை இன்னும்பல முன்னேற்றகருமங்களை அடையச்செய்வார்களென்பதாகவும் குறிப்பிட்டார்.

அதிவண. பிரதமமுகாமைக்கார சுவாமியவர்கள் பேசுகையில்: "நீங்கள் ஆசிரியர் அருட்பிரகாசம் அவர்களை இந்தப்பாடசாலைக்குத் தலைமைஆசிரியராகப் பெற்றது உங்களுக்கு ஓர்பெரும் பாக்கியம் என்றுதான் கூறவேண்டு"மென்று குறிப்பிட்டு, இன்னும் ஆசிரியர்அவர்கள் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக எடுத்துவந்துள்ள சிறந்தமுயற்சியைப் பாராட்டினார். ஈற்றில்மாணவர் மாணவிகளால் கண்கவர் நடனங்கள், பாட்டுக்கள், தேகாப்பியாசங்கள், நடித்தல்கள்முதலியன அழகாக அரங்கேற்றப்பட்டு நன்றியுரையுடனும், தேசியகீதத்துடனும் விழா இனிதேநிறைவேறியது.

பி. சவிரிமுத்து.

## பொதுவர்த்தமானம்

### பறக்குந் தட்டுகள்

பறக்குந்தட்டுகளைப் பற்றிய கதைகள் நீண்டகாலமாக அமெரிக்காவிலிருந்தும், மற்றும் மேற்குநாடுகளிலிருந்தும் அறிவிக்கப்படுகின்றன. ஆனால், இந்தஅதிசயசாதனம் எப்படிப்பட்டதென்பதை விஞ்ஞானிகளால் இதுவரை விளக்கிக்கூற முடியவில்லை.

இந்தியாவிலும் அநேகஇடங்களில் இப்பறக்குந்தட்டுகளைப் பலர்கண்டுள்ளனர். ஆதலால், இதன் உண்மையை அறிய மக்கள் ஆவலாயிருப்பது இயற்கையே. கல்கத்தாவைச்சேர்ந்த விஞ்ஞானியான வண. எவ். கொறக்ஸ் சுவாமியவர்கள் இதைப்பற்றிக் கூறியதாவது: கல்கத்தாவில்அநேகர் பறக்குந்தட்டுகளைப் பார்த்ததாகக் கூறியுள்ளனர். அவர்கள்பார்த்தது வானமண்டலத்தில் சஞ்சரிக்கும் கிரகங்கள் அல்லதுநட்சத்திரங்களில் ஒன்றல்லவென்று நிச்சயமாகக்கூறலாம்.

அமெரிக்காவிலுள்ள விஞ்ஞானிகள் பறக்கும்தட்டுகளைப்பற்றிய இரகசியத்தை அறிந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இத்தகவலை மற்றவர்களுக்குக்கொடுக்காமல் வைத்திருக்கக்கூடும். அணுசக்திபற்றிய தகவல்களை உலகத்திலுள்ள சகலநாடுகளுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டுமெனச் சமீபத்தில் பெருங்கவலை தெரிவித்த அமெரிக்கா பறக்குந்தட்டுகளைப்பற்றிய தகவல்களை வெளியிடாதிருப்பது விசித்திரமாகும்.

பறக்கும்தட்டுகளைத் துரத்திச் செல்லமுயன்ற ஒருவிமானம் நாசம் செய்யப் பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. பறக்கும் தட்டுகளின் கண்ணைப்பறிக்கும்வெளிச்சமானது அவற்றின் அடையாளத்தை மறைப்பதற்காகக் கையாளப்படும் ஒரு செயற்கை முறையினால் உண்டாவதாயிருக்கலாம். ஆதலால்நாம் இதுவரை கருதிவந்திருப்பதுபோல் பறக்கும்தட்டுகள் சாதாரணபொருட்களல்ல. அது உலகமே கவனம்செலுத்த வேண்டிய நூதன சாதனங்களாகும்.

மற்றொரு கிரகத்திலிருந்து ஏசன்றுகள் — இவர்கள் நண்பர்களாகவும் இருக்கலாம், அல்லது பகைவர்களாகவும் இருக்கலாம் — பூமியை உற்றுக் கவனித்து வருகிறார்களா? செவ்வாய்க் கிரகத்திலுள்ள மக்கள் பூமியில் வேவு பார்க்கின்றனரா? இந்தக்கேள்விகளுக்குத் தக்கபதில்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இத்துறையில் பூமண்டலத்திலுள்ள சகலவிஞ்ஞானிகளும் ஒத்துழைக்கலாம்.

பறக்குந் தட்டுகளைப்பற்றிய உண்மையை மக்கள்விரைவில் அறிவதற்காக உலகத்திலுள்ள அந்தந்தநாட்டு அரசாங்கங்கள் விஞ்ஞானிகளுக்கு இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடத்த வசதிகள் செய்துதரவேண்டும்.

### கிறீஸ்துசமய எதிர்ப்பிரசாரம்

"கிறீஸ்துசமயத்திற்கு எதிராகப் பிரசாரஞ்செய்வதால், அல்லது கிறீஸ்துவகோவில்களுக்குத் தீவைப்பதால் புத்தசமயத்துக்கு எத்தகையநன்மையுமே ஏற்படமாட்டாது; புத்தசமயத்தினால் தடைசெய்யப்பட்ட தீமையான காரியங்களை ஒவ்வொருபுத்தசமயியும் விலக்கிநடப்பானாகில் புத்தசமயம் மேலோங்கும்; தர்மஞ்செய்ய ஒருசதமும் இல்லையெனச்சொல்லும் அநேகர் சூதாடுவதற்கும், குடிப்பதற்கும் பணம் வைத்திருக்கிறார்கள்; புத்தபாடசாலைகளைப்பார்க்கிலும், கிறீஸ்துவபாடசாலைகள் கல்வியின்வளர்ச்சிக்காக அநேக வேலைகள் செய்வதால் அரசாங்கம் அவற்றிற்கு அநேகவசதிகள் செய்து கொடுக்கிறது; புத்தபாடசாலைகளும் அதேவசதிகள் பெறவேண்டுமானால் புத்தபணக்காரர் புத்தகல்விக்காகப் பாடுபடவேண்டு"மெனச்சென்ற29-ந் திகதியன்று வெங்கோட்டை மகிலசமித்தியின் வருடாந்தகூட்டத்திலே சங்கசில்லோ உபசேனஅவர்கள் பேசியிருக்கிறார்.

### ரூஷியா அக்கிரமிப்புச்செய்தால்

பிரித்தானிய இராணுவதொண்டர் படைக் கூட்டத்திலே அன்றுதிங்கட் கிழமை பிரித்தானியமந்திரிமாருள் ஒருவரான திரு. சில்வன் லோயிட அவர்கள் பேசியபோது: "ரூஷியா தனதுஇப்போதைய எல்லைக்குவெளியே ஆக்கிரமிப்புச்செய்தால் அதனை எதிர்க்கப் பிரித்தானியும், ஏனையநேசநாடுகளும் தயார்" எனத் தெரிவித்திருக்கின்றார். ரூஷியா பலத்தைத்தான் மதிக்கும்; அதன்எதிரிகளிடம் இராணுவபலம் இருப்பதை அறிந்தால்தான் அது தன்வாலை ஆட்டாமல் இருக்கும்; ஆகவே, பிரித்தானியும், நேசநாடுகளும் தங்கள் பலத்தைப் பெருக்க முற்பட்டிருக்கின்றனஎன்பதைச் சந்தேகத்துக்குஇடமின்றியே அதற்குத்தெளிவுபடுத்திவிடவேண்டும்; படைதிரட்டி அதிகபலத்தைச் சேகரிப்பதன்மூலந்தான் உலகில்சமாதானத்தை நிலைநாட்டலாம்; மற்றொரு யுத்தம் வராமல்தடுக்கலாம்என்றும் அவர்முடிவாகக்கூறலாயினர்.

### நாவிதர்– தையற்காரர் பாடசாலை

கொழும்பிலே நாவிதர்கள், தையற்காரருக்கென ஓர்பயிற்சிப்பாடசாலையைத் திறக்கும்விஷயமாய்க் குடிசைக்கைத்தொழில்களின் தலைவர் விசாரணை செய்து வருகின்றார். நாவலப்பிட்டிப் பிரதிநிதியான திரு. ஆர். ஈ. ஜயதிலக அவர்கள் செய்தவேண்டுகோளின்பேரிலேயே இந்தவிசாரணை நடைபெற்று வருகிறது. இந்தியதையற்காரரும், நாவிதர்களுமாய் வருகாலத்திலே பதினாயிரம்பேர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட விருக்கின்றனரென்றும், இவர்கள் இலங்கையைவிட்டு வெளியேறுமிடத்து, இந்தத்தொழில்களை இங்கேநடத்துவதற்குப் போதியஆட்களில்லாது பொருந்தட்டுப்பாடு ஏற்படுமென்றும் அவர்கூறுகின்றார்.

### முத்தித்திறவுகோல்

எம்மிடத்தில் தற்போது விற்பனைக்குத் தயாராகிவிட்டது. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

| விலை பிரதி: | ரூ. ச. |
|---|---|
| தோற் கட்டு: | 3—50 |
| கலிக்கோக் கட்டு: | 2—50 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## JAFFNA MUNICIPAL COUNCIL

### BUDGET—1955

NOTICE is hereby given in terms of Section 212 (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Budget of the Jaffna Municipal Council containing an estimate of the available Municipal Income and details of the proposed expenditure for the year 1955, will be open for public inspection at the office of the Municipal Council for seven days commencing from 13th December 1954.

S. A. SABAPATHY,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 3rd December, 1954.

## JAFFNA MUNICIPAL COUNCIL

### Supplementary Budget No. 3 of 1954

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 3 of the Jaffna Municipal Council for the year 1954, will be open for public inspection at the Municipal Office, Jaffna, for seven days commencing from 13th December 1954.

S. A. SABAPATHY,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 3rd December, 1954.

## GOVT. NOTICE

### Jaffna Kachcheri

N3376—Local Option Poll will be held on 8-1-55 from 8 a.m. to 12 noon and from 1 p.m. to 6 p.m. to ascertain whether 60% of the Voters of Wards Nos. 1—7 and 13—15 of Jaffna M.C. are in favour of closing the Arrack Tavern No. 1 Grand Bazaar and Hotel Bar at Grand Hotel, Jaffna and Arrack Tavern No. 2—Karaiyoor from 1-10-55. For particulars see Part I, Section I, Government Gazette, 10-12-54.

## பெற்றோர் தினவிழா

உரும்பராய்க் கத்தோலிக்க பாடசாலைப் பெற்றோர்தினவிழா சென்ற 7-12-54 செவ்வாய்க்கிழமை முற்பகல் பாடசாலை மண்டபத்தில அதிசிறப்பாக நடைந்தேறியது. எள்ளுப்போட இடமின்றிப் பெருந்திரளான பெற்றோரும் மாணவர்களும் சமுகங்கொடுத்திருந்தார்கள். ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் திருஇருதயநாதருக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்டபின் செபமாலை சொல்லப்பட்டது. ஆசிரியை சி. லூர்துநாயகி அவர்களால் "திருஇருதயநாதரின் அணைகடந்த நேசம்" என்னும் பொருள்பட ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. அதன்மேல் தலைமைஆசிரியர் பி. அருளானந்தம்அவர்களால் பாடசாலையின் 1954-ம் ஆண்டின் அறிக்கை வாசிக்கப்பட்டுப் பெற்றோரின் காத்திரமிக்க கடமைகள் புகட்டப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஆசிரியர் ஏ. எஸ். லோறன்ஸ் அவர்களும், ஆசிரியர் என். இராசேந்திரம் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். "சற்றுச் சிந்தியுங்கள்", "தியாகம்" என்னும் நாடகங்களும், உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் நடனங்களும், பாடல்களும், நகைச்சுவை பொருந்திய நாடகங்களும் வைபவத்தை மேலும் மேலும் சிறப்புறச் செய்தன. ஈற்றில் நடைபெற்ற தோட்டோபசாரணையுடன் விழா இனிதே நிறைவேறியது.

— நிருபர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 9· 1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org